தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை - 6.

மலர் 5 | சென்னை | 15-11-58 | சனிக்கிழமை | இதழ் 22

அபரஞ்சி

சோபன அறைக்குள் அடி எடுத்து வைக்கும் மணப்பெண்ணைப்போல, நிலவின் ஒளியில் அவனி புதுக் கோலம் பூண்டிருந்தது. மாலையிலிருந்து ஒரே காட்சியைக் கண்டு சலித்துப்போன சோமநாதனால், அந்தப் பாழடைந்த மண்டபத்தில் நெடுநேரம் உட்கார்ந்து கொண்டிருக்க முடியவில்லை. எழுந்து, கால் போன போக்கில் வெளியே நடக்கத் தொடங்கினான்.

கொஞ்சதூரப் பயணத்திற்குப் பிறகு, அரண்மனைப் பூங்காவின் அருகில் வந்ததும், அவனை அறியாமலே அவனது கால்கள் நின்றன. கண்களுக்குப் பெருவிருந்தாக அந்த இரவிலும் தோற்றமளித்த பூந்தோட்டத்திலிருந்து வீசிய மென்காற்று, அவனை உள்ளே அழைத்தது. யாரையும் கேட்காமல், எதையும் கவனிக்காமல், அரண்மனையைச் சேர்ந்த பூந்தோட்டம் அது என்பதையும் அறியாமல் உள்ளே நுழைந்தான் அவன்.

நந்தவனம் முழுமையும் நிறைந்திருந்த மலர்க்கூட்டத்தின் அழகும், அவை தந்த மணமும் அவனைக் கற்பனை உலகில் சஞ்சரிக்க வைத்தன. அழகானதொரு இசைப்பாடலுக்கான பல்லவி அவனது மனத்திரையில் நிழலிட்டது. அவன் மேலே நோக்கினான். அங்கே சிதறிக்கிடந்த நட்சத்திரங்கள், கீழே விரிந்துநின்ற மலர்களைப்போலவே தோன்றின.

'விண்ணும் மண்ணும் ஒன்றுதான்; விண்ணிலே நட்சத்திரங்கள்-மண்ணிலே மலர்கள்' என்று கற்பனை செய்துகொண்டான் அவன்.

நட்சத்திரங்களுக்கு மத்தியில் வெள்ளி நிலவு-ஆனால் மலர்களுக்கு மத்தியில்...?

-அற்புதமான காவியத்தின் அருமையான திருப்பத்தில், சுவடியைக் கறையான் அரித்துவிட்டிருந்ததைப் போலிருந்தது அது அவனுக்கு.

'விண்ணும் மண்ணும் ஒன்றல்ல. அந்த எழில் தவழும் ஒளி விளக்கு இங்கு இல்லை' என்ற முடிவை ஏற்றுக்கொள்ள அவனது மனம் மிகுந்த வருத்தப்பட்டுக்கொண்டது.

யாரோ நடந்து வரும் காலடிஓசை அவனது கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்தது. ஆடலரங்கில் மிகுந்த ஜாக்கிரதையோடு லாகவமாகப் பயன்படுத்தப்படுவதுபோன்று, தரையில் பாவாமல் மிதந்த அந்தக் கால்கள், மலர்ச்செடி ஒன்றின் இடையில் தெரிந்தன. அப்படிப்பட்ட கால்களை அவன் இதுவரை எங்கும் கண்டதில்லை. காவியங்களில் காணப்படும் விறலியரின் கால்கள் இவ்வாறுதான் இருக்கும் என்று அவன் நினைத்துக் கொண்டான். அந்தப் பாதங்கள் காட்டிய பாவம், அவனை மிகவும் கவர்ந்துவிட்டது. வாய் பாடுவதை அவன் அறிவான். கால்கள் பாடுவதை அவன் கேட்டதில்லை; கண்டதில்லை. தனது வாழ்க்கையில் என்றைக்கும் காணாத அந்த அதிசயத்தை, அவன் இன்றுதான் கண்டிருக்கிறான்!

செடியை விலக்கிக் கொண்டு அவன் நோக்கினான். அளவிடமுடியாத வியப்பு அவனை ஆட்கொண்டுவிட்டது. உலகத்துப் பேரழகெல்லாம் ஒன்றாகி நின்றதுபோன்ற அவளது தோற்றம், கனவு காண்கிறோமா என்ற சந்தேகத்தை அவனுக்கு அளித்துவிட்டது. இப்பொழுது அவனுடைய கவிதை உள்ளம் விழித்துக்கொண்டது.

'விண்ணும் மண்ணும் ஒன்றல்ல என்று யார் சொன்னது? நட்சத்திரங்களுக்கு மத்தியில் நிலவு; மலர்க் கூட்டத்துக்கு மத்தியில் இதோ இந்த நந்தாவிளக்கு'-என்று அவன் எண்ணிக்கொண்டான்.

நெடுநேரம் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அவனை அவள் அப்பொழுதுதான் கவனித்தாள். சின்னஞ் சிறு குழந்தையினதைப் போன்ற ஆச்சரிய பாவத்தோடு தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கும் அவனை, அவளால் எதுவும் சொல்லமுடியவில்லை என்றாலும், ஏதோ ஒரு பய உணர்ச்சி அவனிடம் இல்லாமல் போகவில்லை. சிறு கனைப்பின்மூலம், தான் அவனைப் பார்த்துவிட்டதை வெளிப்படுத்தினாள் அவள்.

நினைவுலகுக்கு வந்த அவன், அவள் அருகில் சென்றான்.

'நீங்கள் யார்? இங்கே எங்கே வந்தீர்கள்? யாருடைய அனுமதி பெற்று உள்ளே நுழைந்தீர்கள்?'- அவள் வரிசையாகக் கேள்விக்கணை தொடுத்தாள்.

'அழகுப் பொருள்களின் கேள்விகள்கூட அற்புதமான முறை வைத்துக்கொண்டுதான் வெளிவருகின்றன'-அவன் அமைதியாகப் பதில் சொன்னான்.

'அது இருக்கட்டும்; கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்; நீங்கள் யார்?'

'நானா? கவிஞன்! கற்பனையின் குழந்தை. சோமநாதன் என்பெயர்.'

தன்னைக் கவிஞன் என்று அவன் குறிப்பிட்டதும் அவனிடம் அவ்வளவு கடுமையாக நடந்துகொள்ள அவளுக்குத் தோன்றவில்லை.

'இது அரண்மனைத் தோட்டம். இங்கே மற்றவர்கள் வரக்கூடாது. தெரியாதா உங்களுக்கு?'

'தெரியாது. தெரிந்துகொள்ள நான் இந்த ஊர்க்காரனும் அல்ல. தெரிந்துகொள்ளும் அவசியமும் எனக்கில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நான் சொல்ல அனுமதிக்கவேண்டும். அழகுப் பொருள்களைக் காணுவதைத் தடை விதிப்பது - அதிலும் என் போன்றவர்களிடம் அதைக் கட்டாயமாக்குவது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல...'

சொல்லிவிட்டு, எதையோ எதிர் பார்ப்பதுபோல அவன் அவளை நோக்கினான். அவனது அந்தப் பார்வையின் வெப்பம் தாங்கமாட்டாமல் அவள் தலை கவிழ்ந்துகொண்டாள் நாணம் அவளைத் தன் ஆளுகைக்குட்படுத்திக்கொண்டது.

'நான்...'

'அறிந்துகொள்ளும் அவசியம் எனக்கில்லை. கவிதை இனிமையை நினைவூட்டும் உனது கண்கள், கருத்தைக் கவரும் உன் மேனியின் பளபளப்பு...சுருக்கமாகச் சொன்னால் நீ அழகின் பிறப்பிடம்...'

'அருமையாகப் பேசுகிறீர்கள்...'

'ஆனால் அவை உனக்கு முன்னால் மிகச் சாதாரணமானவை என்பதுமட்டும் நிச்சயம்!'

எங்கோ வெகு தூரத்தில் ஜோடிக் குயில்கள் குரல் கொடுத்தன.

நீண்ட அமைதிக்குப் பிறகு அவள் பேசினாள்.

'நான் அரண்மனைக்குச் செல்ல வேண்டும். ராயர் திடீரென்று நினைத்துக்கொண்டால் எனக்கு ஆள் அனுப்புவார். அந்த நேரத்தில் நான் இல்லையென்றால் அவ்வளவுதான்!...

'அப்படியானால் நீ...'

'அரண்மனை நாட்டியக்காரி அபரஞ்சி. மன்னர் கிருஷ்ணதேவராயர் என்மீது உயிரையே வைத்திருக்கிறார். என்னைப் பார்க்காவிட்டால் அவருக்குத் தூக்கமே வராது. இப்பொழுது அவர் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம்...'

'இப்போது பிரியப் போகிறேன் என்கிறாய்...'

'ஆமாம்; நாளை இதே நேரத்தில், இங்கேயே சந்திப்போம்; இல்லை, வேண்டாம்! இங்கே அடிக்கடி யாராவது காவலர்கள் வரலாம். அதோ தெரிகிறதே ஆற்றுப்படுகை,

— 9-ம் பக்கம் —

கம்யூனிஸ்டுகளுக்கு — 2

கேளுங்கள்; பதில் கிடைக்கும்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கேள்விகளை அனுப்பிய வட சென்னை வீரர் ஜீவான்ந்தம் தன்னுடைய ரசிகர்களிடத்திலே சிரிப்பும் பாராட்டும் கைதட்டுகளும் பெற்றுக் களிப்படைந்துள்ளார். திராவிடத்தின் எல்லைகளைக் கேட்டவர், திடீரென்று வி. பி. ராமனை வைத்து வித்தை காட்டுகிறீர்களே? என்கிருர். வி. பி. இராமன் அவர்களைப்பற்றி கம்யூனிஸ்டுகள் பலமுறை பத்திரிகையிலே திராவிட இலட்சிய வீரர் என்று தீர்ப்பளித்திருக்கிருர்கள். அவருடைய கழகப் பணியைக் களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக, கழகம் தன் இலட்சியப் பிடிப்பைத் தளர்த்திக்கொள்கிறதென்றும் எண்ணியிருக்கிருர்கள். பார்ப்பனியப் பண்புகளை ஒதுக்கியவர்கள் எல்லாம் கழகத்திலே பணியாற்றலாம் என்ற உண்மையை, குறுக்கு வழியென்று சொல்பவர்கள் இன்று வரையிலும் அறியவில்லை. ஏனென்ருல் கம்யூனிஸ்டுக் கட்சியிலேயிருக்கும் பார்ப்பனர்கள் 'ராமமூர்த்தி நம்மவன்' என்று அக்கிரகார நடையிலே பேசி மகிழ்வதற்காகவே இருக்கிருர்கள். பார்ப்பனீயப் பண்புகளை மறந்த கம்யூனிஸ்டுகளை விரல் விட்டு எண்ணிவிடலாம்! மதுரையிலே ஒரு பிரபல கம்யூனிஸ்ட் இருக்கிருர். அவருக்கு, கம்யூனிஸ்ட் கட்சிப் பணியைவிட பார்ப்பனர் இளைஞர் சங்கத்தில்தான் முழு நேர வேலையாகும். மார்க்சியப் பொருளாதாரம், விஞ்ஞான சோசலிசம், கற்பனு சோசலிசம் என்றெல்லாம் முழக்கமிடுவார். அத்துடன் எங்காவது ஒரு தெருத்திண்ணையில், 'பிர்ம்மஞான மந்திரத்தில்', 'மதத்தின் மகிமை'யைபபற்றியும் பேசி பார்ப்பனப் பெரியவர்களிடத்திலே 'அம்பிப்பயல் நன்னு பேசுருன்' என்று புதிய 'சர்டிபிகேட்' வாங்கிக் கொள்வார்! ஈட்டிமுனை ராமகிருஷ்ணன் எனப்படும் இவரைப்போல பல பேர் உண்டு. ஆனல் இவர்களைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு ஜீவானந்தம் போன்ருர்க்குத் தைரியம் வருவதில்லை! 1953ல் கழகத்தைப்பற்றியும் தலைவர்களைக் குறித்தும் கூவத்து நடையிலே எழுதிய ராமகிருஷ்ணனைக் கண்டித்து, கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுச் செயலாளர் எம். ஆர். வெங்கட்டராமன் 'ஜனசக்தி'யில் எழுதியிருந்தார். ஆசிரியர் எழுதியதை உதவி ஆசிரியர் மறுப்பார். இருவர் செய்ததும் தவறு என்று செயலாளர் தண்டிப்பார். அந்தப் பத்திரிகையின் தராதரம் அப்படி. ஆனல் வி. பி. இராமன் விவகாரம் அப்படியல்ல என்பதனை அரசியல் நாணயம் படைத்தோர் ஒப்புக்கொள்வார்கள்! கழகப் பணிக்காக கல்லூரிப் பதவியை விட்டவர் இராமன்-பார்ப்பன இளைஞர் சங்க வேலைகளுக்காகக் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டே ஓடியிருப்பவர் ராமகிருஷ்ணன். இல்லையென்று மறுத்துவிட முடியுமா?

திராவிட முன்னேற்றக் கழகம் ஆந்திர, கேரள, கன்னட மக்களையும் கூட்டாட்சியின் கீழ் ஒன்ருக இணைத்து வாழ இயலும் என்று எல்லா வகையான ஒருமித்த தன்மைகளையும் சான்ருகக் காட்டியுள்ளது. பிரிந்து போனவர்களைப் பற்றிப் பேச நீங்கள் யார் என்கிருர் ஜனசக்தியின் ஆசிரியர்! மொழிப் போராட்டத்திலே உதித்த இன உணர்ச்சி 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற நாட்டுப் பற்றையும் வளர்த்தது. ஆந்திர, கேரள, கன்னடத் தலைவர்கள் பலர் நீதிக் கட்சியில் பணியாற்றியோர்; தமிழ் நாட்டுக்குள்ள எல்லா உரிமைகளையும் தென்னகத்தின் ஏனைய பகுதிகளும் பெற்ருக வேண்டும்; அந்த முறையிலே இயக்கம் பலப்பட வேண்டும் என்று கருத்து அறிவித்த பின்புதான் திராவிட நாட்டுப் பிரச்சினை கழகத்தின் இலட்சியமாயிற்று. வடநாட்டு ஆதிக்க மனப்பான்மையை அனுமந்தய்யா எதிர்க்கிருர். சஞ்சிவ ரெட்டி சஞ்சலப்படாமல் கண்டிக்கிருர். கேரளத்துக் கம்யூனிஸ்டுகளோ உணவு விசயத்திலிருந்து உரிமைகள் பறிபோகும் எல்லாக் காரியங்களுக்கும் மத்திய சர்க்காரைக் கண்டிக்கிருர்கள்–இந்தப் பல பகுதி கருத்துக்களையும் கழகம் தன் இதயத்தில் நிறுத்தி, திராவிடம் வாழமுடியும்; வாழ வேண்டும் என்று வலியுறுத்துகிறது! இதனைக் கம்யூனிஸ்ட் ஜீவானந்தம் ஒப்புக்கொள்ளவில்லை! பிரிந்து போன பாகிஸ்தானில் ஜனநாயகம் வளரப் பாடுபடுவோம் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கௌன்சில் தீர்மானம் போட்டபோது, அந்த எண்பது பேர்களுடன் தானும் சேர்ந்து ஏற்றுக்கொண்டவர்தானே ஜீவானந்தம்! சென்னை பிராட்வேயிலே இருக்கும் 'பிராவ்தா' பிரமுகர் 'சிரியாவைத் தொடதே' என்று ஓலமிட்டது ஏன்? கழகத்திற்கு ஆந்திராவும் கன்னடமும் கேரளமும்பிரிந்து போனவைகள்; தலையிடுவது தவறு. கம்யூனிஸ்டுகள் டி. டி. கே. நிதியமைச்சரை 'டிஸ்மிஸ்' செய்க என்று தீர்மானம் போட்டது கட்சியின் சொந்த விசயமா? லெபனுன் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியிலா இருக்கிறது? ஏன் "அமெரிக்க ஏகாதிபத்தியமே வெளியேறு, வெளியேறு!" என அலற வேண்டும்? திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகத்து விடுதலையைப்பற்றிப் பேசக்கூடாதாம். ஆனல் எட்டேகால் லட்சணத்துக் கம்யூனிஸ்டுகள் உலகம் பூராவுக்கும் அபூர்வ யோசனைகள், ஆராய்ச்சி முடிவுகள் தருவதற்காகவே இருக்கிருர்களாம்! அண்ணுத்துரை யார்? நெடுஞ்செழியன் யார்? அன்பழகனும் கருணாநிதியும் யார்? சம்பத்தும் நடராசனும் யார்? ஜீவானந்தங்களே, நீங்களா கேட்கிறீர்கள்! அதுவும் தமிழ் மக்களிடத்திலா கேட்கிறீர்கள்-பூமிக்குள்ளும் சாக்கடையோரத்திலும் ஒதுங்கித் திரிந்த கம்யூனிஸ்டுகள் மேனியில் படிந்துள்ள புழுதியைத் துடைத்துவிட்டு சான்ருேர் பலரையும் கண்டு கேட்டால் இவர்கள் யார் என்பதைத் தெரிவிப்பார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி ஏதையாவது இரண்டு மணி நேரமாவது பேசிவிட வேண்டிய முடிவில் வட சென்னையில் மேடையேறிய ஜீவானந்தம்-நன்கு ஜீரணிக்கும்வரை பேசுவதற்கு, தூத்துக்குடித் தேர்தலை ஆதாரமாகக் காட்டி, கம்யூனிஸ்டு கட்சிதான் பெரிய கட்சி-'தி. மு. கவை' பின்னுக்குத் தள்ளிவிட்டோம் என்ருராம். கையொலி காதைக்கெடுத்ததாம் ஜனசக்தியின் வாக்கியப்படி! உண்மையில் கம்யூனிஸ்டுகள் கருதுவதுபோல, ஆணவத்தோடும் ஆர்ப்பாட்டத்துடனும் பேசுவதுபோல, கம்யூனிஸ்டுகளால் மட்டுமே கழகத்தைப் பின்னுக்குத் தள்ள முடிந்ததா? காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி வேலை செய்தது. ஆனல் கம்யூனிஸ்டுகளின் 3000 ஓட்டு வெற்றியைப் பாராட்டிக் கூட்டம் போட்டதா? தமிழரசுக் கழகம்-கம்யூனிஸ்டுகளின் வெற்றியென்று ஏற்றுக்கொண்டதா? 'செங்கோல்' சொன்னது பிரிவினைக் கோஷத்தின் எதிர்ப்பு கம்யூனிஸ்ட் அபேட்சகருக்கு அதிக ஓட்டுக்களைத் தந்தது என்று! பேரிகை மாரிசாமியார் தோள் தட்டினர்; கழுகுமலைக் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி மத்தியக் கமிட்டியினருக்குத் தந்தியடித்தது, கம்யூனிஸ்டுகள் ஜனநாயகத் தலைவர்களைத் தாழ்வாகப் பேசியவர்கள்-எனவே தூத்துக்குடியில் ஆதரிக்கக்கூடாதென்று! அதுபோலவே திருமங்கலம் சட்ட சபை உறுப்பினர் பெரியவாலகுருவரும் கம்யூனிஸ்டுகளை நேரடியாக ஆதரித்துப் பேசுவது தவறென்று அறிக்கை வெளியிட்டிருந்தார்! பேரிகை வாசிகள் கம்யூனிஸ்டுகளைப்பற்றிப் பேசி ஓட்டுக் கேட்கவில்லை. முதுகுளத்தூரையும் கீழத்துவலையும் காட்டி-அப்போது சந்தனத் தோப்பும்-மற்ற கேரளத் தோட்டாக்களும்- தோட்டங்களில் வெடிக்காத காரணத்தால், காங்கிரசை ஒழிக்க வேண்டும் என்ருர்கள்! முன்னேற்றக் கட்சியின் சார்பில் 'கண்ணகி' பத்திரிகை கம்யூனிஸ்டுகளை ஆதரித்தது. ஆனல் அதிக ஓட்டுகளைப் புகழாமல்-பார்லிமெண்ட் கட்டிடத்தில் நேதாஜியின் படமும் வைக்க வேண்டும் என்ற கம்யூனிஸ்டுகளின் ஆய்வுரையைக் கேலி செய்து-சுபாசை எதிர்த்தவர்கள் இப்போது பத்தினி வேடம் போடுகிருர்கள் என்று கம்யூனிஸ்டுகளை இரவு ராணிகளாக்கிற்று! காரணம் தூத்துக்குடி உதவிக்காக கம்யூனிஸ்டுகள் நன்றி தெரிவிக்க

— 5-ம் பக்கம் —

தஞ்சை

மாணவர் கழகம்

கதை, கட்டுரை, கவிதை & நாடகப் போட்டிகள்

தஞ்சை, மாணவர் கழகத்தார், ஷை போட்டிகளை நிகழ்த்துகின்றனர். எந்நாட்டினரும் எப்பாலினரும் கலந்துகொள்ளலாம். மற்றைய விவரங்களைச் செயலாளருக்கு எழுதி அறிக.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ளோர் பதில் அஞ்சல் அட்டையும், வெளிநாட்டிலுளோர் முகவரியிட்ட அஞ்சல் உறையும் அனுப்பி, விவரம் அறிக.

போட்டி முடிவு நாள் : 30-11-'58.

செயலாளர்,
மாணவர் கழகம்,
643, கன்சர்கோட்டைச் சந்து,
தஞ்சை.

கவியரங்கில்

கண்ணதாசன்

முன்னுரை

**பெண்மையினை மென்மையெனப் புலவர் சொல்வார்!
பேசுகிளி, குயில்,தென்றல் மதிஇ வற்றைப்
பெண்ணென்றார்! ஏன்சொன்னார்? இவற்றி லுள்ள
மென்மையினால் தான்சொன்னார்! ஆண்கள் தம்மை
வன்மைமிகு காளையென வகுத்துச் சொன்னார்
மாடென்ப ததன்பொருளாம்! இப்போ திங்கே
மென்மைமிகும் பெண்மையினைப் பழனி யப்பன்
விரித்துரைப்பார்! விருந்துண்டு மகிழ்வு கொள்வீர்!**

தமிழ்: பெண்மை

— சாமி. பழனியப்பன் —

தமிழர்தம் உளத்தில் கவிதைத் தென்றல்
அமிழ்தம் பாய்ச்சும் அன்புசால் தலைவ!
அரங்கில் கவிமழை பொழிந்திட வந்த
அருந்தமிழ்க் கவிஞரீர்! கவிதைத் தேனை
அள்ளி யுண்ணுதற் காவலோ டமைந்துள
தெள்ளிய ரே!இவ் வரங்க மமைத்த
மன்றத் தினரே! நாவல நல்லோய்!
சென்னி தாழ்ந்துநான் செங்கை கூப்பினேன்.

உணர்வை வளர்த்து உள்ளொளி பெருக்கித்
தணிப்பரும் இன்பம் தருவது தமிழாம்!
தமிழெனும் சொற்கு இனிமை என்னும்
அமைவுறு பொருளே வழங்குவ தன்றோ?
கன்னடம் துளுவம் கவின்மலை யாளம்
இன்பத் தெலுங்கு இவற்றினை ஈன்றும்
இளமையும் வனப்பும் குன்ரு வண்ணம்
வளமையோ டிலங்கி வாழும் தாயவள்.
மன்னுல கிற்பல மொழிகளை யடுத்தும்
தன்னிலை திரியாத் தகைசால் கன்னி.
கொள்ளை இன்பம் கொடுத்து நமதரும்
உள்ளங் கவரும் மெல்லியற் கள்ளி.
'ழ'கரம் என்னும் சிறப்பெழுத் துடைய
தகைசால் கற்பினள் தமிழ்மொழிக் கன்னி.
ஊனும் உயிரும் உயிரின் நாடியும்
ஆன செந்தமிழ் ஆதி முதன்மொழி.
எண்ணும் சிறப்பு யாவும் பொருந்திய
தண்டமிழ்க் கன்னியின் பெண்மையைப் பாடுக
என்றனர் மதுரை எழுத்தாள மன்றினர்.
நன்றெனக் கூறி நானும் ஒப்பினேன்.

பெண்மை என்பது என்புதோல் போர்த்த
கண்கவர் உடம்பைக் குறிப்பது அன்று.
அடக்கம் பொறுமை ஒப்புரவு அழகு
கடந்த இரக்கம் பரநலம் தொண்டு
என்னும் பற்பல பண்புகள் இணைந்து
பொன்மலர் மாலையாய் ஆனது பெண்மை.
கண்ணுற் கண்டு மகிழொணு அமைதி
பெண்வடி வாகிப் பேரின் பந்தரும்.
இத்தகு பண்புகள் இனிதுற அமைந்த
சித்திர விழிநிகர் சேயிழை யாரை
வெறுத்து ஒதுக்கினல் விரிந்தஇவ் வுலகில்
வெறிச்செய லன்றோ தலைவிரித் தாடும்?
பெண்மையை வெறுப்போர் பேயினுங் கொடியர்.
கண்களை வெறுப்போர் எவரைநாம் கண்டோம்?
நமையெலா மிங்கே கூட்டிய சக்தி
அமைவுறும் தமிழின் பெண்மையே யன்றோ?

செந்தமிழ்ப் பெண்மையில் நான்கொண்ட காதலால்
சிந்தையில் முகிழ்த்த சிற்சில செப்புவேன்:

சென்றுகொண் டிருக்கும் இளமையே போலச்
சென்றிடும் யாறெலாம் விரிகடல் சேரும்.
'பொய்யாக் குலக்கொடி' என்றே புகழும்
வையையோ கடல்முகம் காண்பதே இல்லை.
இனிக்கும் செந்தமிழ் ஏடுகள் தொலைக்க
நினைத்த வஞ்சக நெஞ்சினர் அந்நாள்
தண்டமிழ் ஏடுகள் பற்பல வற்றைக்
கொண்டு வீசினர் குளிர்புனல் வையையில்
ஏடுகள் வழங்கிய இன்பத் தமிழின்
பீடுறு பெண்மைக் காதலில் மயங்கி
அருந்தமிழ் வையை ஆரொலி கடலின்
விரிமுகம் காண வெறுத்தது போலும்.

வண்டமிழ் நிலவிய வளமார் கண்டம்
கொண்ட ஆழ்கடல் கொதித்தெழல் ஏனோ?
செந்தமிழ்க் கண்டம் உண்டு சுவைத்த
முந்திய நினைவால்! அதனு லன்றோ
காதலைச் சுவைத்த கன்னியின் உளம்போல்
மோதும் அலைகளை இன்றும் இன்னும்
எழுப்பு கின்றது? எழிற்றமிழ்ப் பெண்மையில்
விழுமிய காதல் கொண்டவர் மறப்பரோ?

பனித்துளி தன்னில் பகலவன் தன்னை
இனிதுறக் காட்டுதல் போலக் குறளிலே
மண்ணினும் கடலினும் வானினும் பெரிய
எண்ணக் குவியலை இனிதே கூறிய
வள்ளுவப் பெருந்தகை ஒள்ளிய குறளை
உள்ளங் கவரும் தெள்ளிய தமிழிலே
ஆக்கி யருளினர் எனிலவர் செந்தமிழ்
தேக்கிய இன்பப் பெண்மையிற் கொண்ட
தணிப்பரும் காதலா லன்றோ? இதனை
உணாந்தவர் மறுப்பரோ? மறுக்கவே மாட்டார்.

நெல்லிக் கருங்கனி உண்டவர் நெடுநாள்
தொல்லுல கிதனில் வாழுவர் என்பார்
அரிதாம் அமுதாம் கனியினை அதியன்
பெரிதும் முயன்று பெற்றவப் போழ்தில்
செவ்விய கனியைத் தின்னுதற் கெண்ணிலன்.
ஔவைக் கிதனை அளித்தால் உலகம்
இன்றமிழ்க் கவிபல ஏற்று மகிழ்வுறும்
என்றே எண்ணி ஔவைக் கதனை
ஈந்தனன். இச்செயல் எதனைக் குறிக்கும்?
ஆர்ந்த புகழ்சேர் அருந்தமிழ்ப் பெண்மையில்
அதியமான் கொண்ட காதலே யன்றோ?
இதனை மறுப்பவர் எவருமிங் குளரோ?

நாட்டை இழந்து நலமெலா மிழந்து
காட்டில் துன்பிடை வதிந்த குமணனை
வறுமையில் உழன்ற புலவன் கண்டு,
வறுமை கோயை அறிவித் ததுமே
"அந்தநாள் வந்திலை அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்துநீ நொந்தெனை அடைந்தனை
தலையினைக் கொண்டுஎன் தம்பிகைக் கொடுத்து
விலையினைப் பெற்றுநின் வறுமைநோய் களையே"
என்று கூறினன் எனிலவன் உயிரினும்
இன்றமிழ்ப் பெண்மையில் கொண்ட காதல்
அன்றோ பெரிது? யாரிதை மறுப்பர்?
அன்பரீர் நீவிர் மறுக்கின் றீரோ?

விரிந்த மெல்லிய மணமலர் பரப்பிய
முரசு கட்டிலில் மோசி கீரனர்
அயர்ந்தே படுத்து உறங்கிக் கிடந்தார்.
புயவலி மன்னனே புலவரென் றறியாது
வாளினை எடுத்துயிர் வாங்கிட விரைந்த
வேளையில் தண்டமிழ்ப் புலவரைக் கண்டனன்.
"ஐயகோ! என்செயத் துணிந்தேன்! என்னரும்
உய்தமிழ்ப் புலவரே அன்றோ?" என்றுதன்

— 9-ம் பக்கம் —

சுதந்தரம் சோறு போடாது!

அவர் வாய் திறந்தால்...

முத்துக்கள் உதிரும்; மலர்கள் மணக்கும்; பொன்மழை பெய்யும்!

அவர் நாஅசைந்தால்...

அறிவு, பள்ளுப் பாடும்; ஆராய்ச்சி, கூத்து ஆடும்; அறியாமை, வெருண்டோடும்!

அவர் மேடையேறினல்...தமிழ் முழங்கும்; கவிதை ஒலிக்கும்; காவியம் செழிக்கும்!

ஆனல் ஒரு தொல்லை. மணிமொழி சிந்தும் தன் திருவாயை எளிதில் திறக்கமாட்டார். கார்த்திகைப் பிறைபோல்தான் காட்சியளிப்பார் மேடையில்! வருந்தி அழைத்தாலும் வாரார் அடிக்கடி! "மௌனகுரு" என சில அரசியல் வாதிகள் செல்லமாக அவரை அழைப்பதுவும் இதனல்தான்!

புதிய சிந்தனைகளைப் பொழியும் இந்த "புத்தபெருமான்" அண்மையில் சென்னையில் திருவாய் மலர்ந்தருளிய கருத்துரைகளைக் காணுதார் — கேளாதார் — பிறவிப்பயன் பெருதார் ஆவர்!

சொன்னராம் தன் செந்நாவைப் புரட்டி:

"சுதந்தரம் சோரு போடும்?"

x x x

"மக்களே! கொட்டும் வறுமையும் கொத்தும் பசிப்பிணியும், எழில் கொஞ்சும் தாயகத்தில் இருக்கலாமா? நம் மக்கள் உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை; இருக்க இடமில்லை. இந்நிலை ஏன்? நம் தாயகத்தை அன்னியன் ஆள்வதால்தான் இக்கொடுமை! வெள்ளையன் நம்மைச் சுரண்டி வயிற்றிலடிக்கிருன்! அவன் தொலைந்தால்தான் — நம் உழைப்பு நமக்கே ஆனல்தான் — நலம் பெறுவோம்; வலிவுறுவோம்! நீங்கள் கையை உயர்த்துங்கள்! விடுதலை கிடைத்திடும்; கிடைத்ததும்... ஆட்சிக்கு வந்திடுவோம்; அன்னசத்திரங்கள் ஆயிரம் கட்டிடுவோம்; ஆலைகள் பல்லாயிரம் அமைத்திடுவோம்; மணிமாளிகைகள் தெருவெங்கணும் நிறுவிடுவோம்! ஆமாம்! விடுதலை வந்தால்தான், விரசுதந்தரம் கிட்டினல்தான் இந்நிலை வரும்!" என அறுதியிட்டுக் கூறினர்; ஆதரவு கோரினர்!

இது 'சுதந்தரம்' பட்டொளி விசுவதற்கு முன்னர்.

"வெள்ளையனை விரட்டி விட்டோம்! விரசுதந்தரம் பெற்று விட்டோம்! இனி நம் நாட்டில் பஞ்சம் ஒழியும்; பட்டினி அழியும்; இல்லாமை நில்லாது; ஏழ்மை கொட்டாது! பாருங்கள்! சில நாட்களில் புது இந்தியா உருவாகிவிடும், புன்னகைப் பூங்காவாய்! மக்களெல்லாம் அறுசுவையோடு உண்டு, மென்துகில் உடுத்தி, உப்பரிகையில் உலா வருவர்! அந்தக் காட்சி விரைந்து வரும்! விலங்கொடித்ததன் - விடுதலை பெற்றதன் பயனைக் காணத்தான் போகின்றீர்!" என்றும் பறையறைந்தனர் சென்ற விடமெல்லாம்.

இது விடுதலைக்குப் பின் வந்த வெல்லச் சொற்கள்.

நம்பிக்கையால் நாவை நனைத்துக் கொண்டு, பகற்கனவு கண்டனர் பாரத மக்கள்!

முடிவு...? விளைவு...?

பஞ்சமோ பஞ்சம்!

கஞ்சி குடிப்பதற்கிலார் கணக்கென்ன கொஞ்சமோ?

நடுத்தெருவே இருப்பிடம்! "கோர் ஆப் பிளாட்பாரங்க"ளின் அவலம் குறைந்ததா?

கந்தலும் இல்லை!

உடுப்பதற்கு நான்கு முழமும் கிடைக்காத "பழனியாண்டவர்" எண்ணிலர்!

அப்போது தான் கேட்டனர் மக்கள்: "ஆளவந்தோரே! உறுதிகள் ஆயிரம் தந்தோரே! ஆண்டுகள் பத்தாகியும் அவலம் அழியவில்லையே! ஏனையா, சுதந்திரத்தின் பரிசுகள் இவைதாமா? சுதந்தரம் ஏன் சோறு போடவில்லை? துணி தரவில்லை? வீடு அமைக்கவில்லை?"

மக்கள் பாய்ந்ததும் "மௌனகுரு"வுக்குச் சினம் வந்துவிட்டது. உடனேதான் சொன்னராம், தன் எழிலான வாய் திறந்து மணியான அந்தக் கருத்தை.

எதற்காகப் பரங்கியனை விரட்டினர்?

பசியின் கொடுமைக்காளான மக்கள் பதினன்காம் லூயியைப் பழிவாங்கியது, மன்னனுக்குப்பின் மக்களாட்சியால் வேண்டிய அனைத்தும் பெறலாம் என்றுதானே? பெருமக்கள் வீட்டுக் காவல் நாய்களோடு கறித்துண்டுக்குப் போட்டியிட்ட பிரஞ்சுக்காரர் கனவும் அதுதானே!

"சாரை வீழ்த்தினல், சாவு விழும்; புசிக்க ரொட்டியும், உடுக்க அங்கியும், இருக்க வீடும் பெறலாம், மக்களாட்சி நிறுவி" என்றுதானே நம்பினர் உருசியர்? பிண மலைகளை அடுக்கிக் காட்டியதும் அதற்குத்தானே?

சிங்க இளைஞர் பலர் செந்துளிகள் சிந்தினர், சிந்தை களிக்கும் "இந்திய விடுதலை"க்கு. அன்னரை நெறிப்படுத்திய தலைவர்தாம் சொன்னவை எவை?

"ஆள்வோர் கடன், ஆளப்படும் மக்களுக்கு உணவு, உடை, உறையுள் தருதல்தாம். அதைச் செய்யாத வெள்ளையனே! வெளியேறு" என்றனர்.

"வளம் கொழிக்கும் கங்கைக் கரையில் பஞ்சமா? தெருவெங்கும் பிண மலைகளா? தேம்பியழுவோரைக் காணுத வெள்ளை அரசே! சிங்கங்கள் உலவும் இந்த வங்கத் திருநிலத்தில் கழுகுகள் அலைவதைப் பார்! நாய்கள் குதறுவதைக் காண்!" என்று முழங்கிவிட்டு மக்களைப் பார்த்துச் சொல்லினர், காங்கிரசுத் தலைமையர்:

"மக்களே! சுதந்தரமாயிருந்தால் சுடுகாடு வந்திருக்குமா? விலங்கிட்டு, நம் உழைப்பைச் சுரண்டி, தன் விருந்து மண்டபத்திற்கு எடுத்துச் செல்லும் இந்த வெள்ளையன் வெளியேறிவிட்டால் இத்தொல்லையே இராது. எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும்!"

"இந்தியாவில் ஒரு நாய்கூடப் பசியோடு கிடைக்கக்கூடாது. அதுவே என் குறிக்கோள்!" என்ருன் விவேகானந்தன். அந்த மொழியைக் கட்டம் கட்டியும் போட்டது ஓர் ஏடு. இன்று உணவின்றிக் கிடக்கும் மனிதர் எத்துணைக் கோடி?

"பங்கிட்டுத் தருகிருனும் பதினறு அவுன்சு உணவு, 'இனிய பொழில்களும் நெடிய வயல்களும்' உள்ள இந்த நாட்டினர்க்கு. நம்மை நாமே ஆண்டால் கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தருமே இந்நாடு!"

பாரதியைக் காட்டினர் பஞ்சையரிடம், பரங்கியரை வீழ்த்த.

பாரதியும் கனவு கண்டான்; நினைத்ததைச் சொன்னன்:

"தனியொருவனுக் குணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடு வோம்!"

அவன் கனவு நனவானதா? உணவற்ற மக்கள் சகத்தினை அழிக்காவிட்டாலும், பதுக்கி வைக்கும் "கோட்புலி நாயனர் குழு"வையாகிலும் அழிக்க முடிந்ததா? மனிதர் உணவை, மனிதர் உருவில் மார்வாரிகளும் குசராத்திகளும் மற்றையோரும் பறிப்பதைத் தடுக்க முடிந்ததா?

அவலம் ஊர்வலம் வந்தது; மக்கள் கத்தாழையைத் தின்றனர்; கண்ட புல் பூண்டுகளை உண்டனர்; சாத்தூர்ப் பகுதி மனிதர், எறும்பு சேர்த்த உணவையும் பறித்துத் தின்றனர்; பசி பொறுக்கமுடியாது பிணத்தைத் தின்ருன் ஒருவன்; வேறு பலர் விலை கூறினர் குழந்தைகளை. நெசவாளர் நாட்டுக்கு ஆடை தர வாய்ப்பில்லாததால் நடுத்தெருவில் நின்றனர். அன்னர்க்கு வானமே கூரையாயிற்று.

இதைக் கேட்டால் மௌன குரு சொல்கிருர், "சுதந்தரம் சோறு போடாது! உழைப்புதான் சோறு போடும்; நீங்கள் உழைத்து உண்ண வேண்டும்!"

மதி மிக்கவரே! மௌனகுருவே! மக்கள் எப்போது மறுத்தனர் நீங்கள் உழைக்கச் சொல்லியும்?

புதிய முகவரி:
மா. பாண்டியன்,
"தென்றல்"
சென்னை-6.

"வேலை கொடு! சோறு போடு!" என்றுதானே நாளும் கேட்கின்றனர்.

"மகனே! மனைவியோடு வாழ்ந்தால்தான் பிள்ளை பிறக்கும்!" என்ருனும் ஒருவன், மழலை இன்பம் நாடிய மகனுக்கு மணத்தை முடித்து வைக்காமல். "மணம் முடியும்; மறு ஆண்டுபாரும் **பேரனை!**" என்ருனும் மகன்!

மௌன குருவே! நீவிர் எப்போது வேலை பார் என்று சொல்லியும், சோம்பித் திரிந்தனர் மக்கள்!

தெரியாததைச் சொல்லிவிட்டவரே! உழைத்தால்தான் உணவுண்டு என்பவரே! உமக்குமட்டும் எப்படி வருகிறது உழைக்காமல் - களைக்காமல், ஊர் சுற்றும் வாழ்வு?

கோடிக்கணக்கில் செலவழித்து வந்தவன் போனவனுக்கெல்லாம் விருந்து வைக்கிறீரே, அந்த உணவுக்குப் பணம் எங்கிருந்துவந்தது?

உழைக்கப் பலருக்குப் பணியுமில்லை. உழைக்கும் சிலரது உழைப்பையும் ஆள்வோர் நீர், கொள்ளையடிக்கின்றீரே! பின் எப்படிப் பசி அழியும்? தென்னுடுதான் அழியும்!

கொடுமை கோலோச்சுகிறது என்ருல், கொதிக்கிருர்; கொண்ட பதவியை மறந்து குதிக்கிருர், மௌனகுரு. "கொண்டு வந்தா கொடுப்பான் கடவுள் உன் காலில்!" என வேறு **நாத்திகம்** பேசுகிருர், நாடாளும் மௌனகுரு! ஆண்டவனை, மக்கள் நம்பியது அந்தக் காலம்; ஆள்வோரை நம்புவது இந்தக் காலம்; கடமை மறந்தோரை எதிர்ப்பது எதிர்காலம்!

இதை உணரா அமைச்சர்தான் - மௌனகுரு காமராசர்தான் ஏசுகிருர், 'சுதந்தரம் சோறு போடுமா? என்று.

"பின் என்ன போடும்?" என்பீர்.

இந்தியச் சுதந்தரம் குண்டு போடும்; கண்ணீர்ப் புகைபோடும்; சிறையில் போடும்; வரி போடும்; வயிற்றில் மண்ணை வாரிப் போடும்; எப்போதாவது கோதுமை போடும்!

மா. பாண்டியன்

★

எங்கும் கிடைக்கும்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!''

எண்ணம்

மலர் 5 || 15—11—58 || இதழ் 22

சங்கர ராணுவம்!

அறிவியல் வளர்ந்த பின்பும்
அணுவையும் துளைத்து மேவும்
பொறியியல் மிகுத்த பின்பும்
புதுமைகள் நிறைந்த வீர
நெறிபல கண்ட பின்பும்
நிகரிலாத் தலைவ னென்றே
துறவியைக் காட்டும் வீணர்
தொலைந்தன ரிலையே தோழா!

சங்கராச் சாரி யார்தான்
தலைவராம் உலக மாந்தர்
பொங்கியாச் சாரி காலில்
போய்விழல் தரும வாழ்வாம்!
இங்குளார் இளித்த வாயர்
என்பதால் துறவி யான
சங்காராச் சாரி யாரை(த்)
தாங்குவோர் உளரே இன்னும்!

தாளெனல் அறிவின் தூது!
தமிழ்வளர்க் கின்ற செல்வம்!
வாளினும் வலிய தாகி
மைக்கரு மருந்து சேர்த்து
நீள்புவி நிமிர்த்தி வைக்கும்
நிகரிலா ஏடென் பாரே!
தாளெலாம் துறவி யாரின்
தாள்தொடல் காண்கின் ரேமே!

வகுத்ததோர் உலகின் வாழ்க்கை
வழியறி யாத மாந்தர்
பகுத்தறி விழந்து போனர்!
பண்பினை மறக்க லானர்!
தொகுத்தறி யாத தாலே
துறவிக ளானேர் பாதம்
வழித்தெறி கின்ருர். அந்தோ!
வாழுமோ தமிழர் பூமி!

—கண்ணதாசன்.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

வில்லையென்ற குற்றச்சாட்டு! கம்யூனிஸ்டுக் கட்சி தனியாகக் கழகத்தைப் பின்னுக்கு இழுக்கலாயக் கற்றது. ஆனல் கழகம் காஞ்சியிலும் சேலத்திலும் குழித்தலையிலும் மதுரையிலும் பாதாளத் துக்கே தள்ளிவிட்டதை மறந்துவிடக் கூடாது. எனவே எவரெவருக்கோ கண்காட்டி இடையாட்டிப் பெற்றுக் கொண்ட தூத்துக்குடியை வைத்துக் கழகத்தைக் கணக்கிட வேண்டாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையெல்லாம் யதார்த்த நிலையில் அலசிப் பார்த்த தோழர் கம்பானந்தர் "சோவியத் யூனியனும், சீனவும் சகல மக்களுடன் குடியரசுகள் அமைத்துள்ளது போல் இந்தியாவிலும் வாழமுடியாதா?'' என்று கேட்டாராம்! கடைந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் வீரர்களே! சோவியத் யூனியனும் சீனவும் ஏன் ஒன்ருக வாழமுடியவில்லை? என்றைக்காவது எண்ணிப் பார்த்தீர்களா? சோவியத்தைப்போல் சீனத்தைப்போல்தான் இந்திய உபகண்டம் இருக்கிறதா? வாழமுடியும் என்று சொல்கிற கம்யூனிஸ்டுகளே! ஏன் தனித்தனி இனவாரியாக மொழி வாரியாகக் கூடி ஐக்கியமாக வேண்டும் என்கிறீர்கள்? நாடு வேண்டாம். கம்யூனிஸ்ட் கட்சி டில்லி முதல் திருவனந்தபுரம் வரையிலும் ஒற்றுமையாக இணைந்து வாழ முடிகிறதா? ரஷிய சர்வாதிகாரிகள் வந்துவிட்டால்கூட ஒன்ருக வாழமுடியுமா-வாழவிடுவீர்களா? அங்கே குடியரசு அமைத்துச் சேர்ந்து வாழ்கிருர்கள். இங்கேயும் அமைத்து வாழ முடியும் என்று சொல்லுகின்ற ஜீவானந்தங்களே! அப்படியானல் திராவிட நாட்டுக் குடிஅரசு அமைத்திட நீங்கள் தயாராக இல்லையே ஏன்? முதலில் தென்னகத்தில் ஒரு குடியரசு-அதன் பிறகு ஒன்ருக இருக்க வேண்டிய இணைப்பு முறை-இதற்குப் பதில் தராத உங்கள் அலங்கோலப் பேச்சு, நாவலர் பெருமானுக்குத் தந்த கேள்விகள் சரியாகுமா? சீனவையும் மாசேதுங்கையும் கழகத்துக்குக் காட்ட வேண்டாம். மாஸ்கோவுக்கு நினை வூட்டுங்கள்! மலட்டோவ் அவர்களின் தற்போதைய தாழ்நிலைக்கு இரக்கப்பட்டு மீண்டும் அவருக்குப் புதுவாழ்வு தர வேண்டுமென்று மாசேதுங் மாஸ்கோ மாளிகை வாசிகளுக்கும் சொல்லியிருக்கிருர். சோவியத்தின் சோபிதத்தைப் பாராட்ட, நன்றி விசுவாசத்தைத் தெரிவித்துக்கொள்ளத் தயாராகிக் கொண்டிருக்கும்கம்யூனிஸ்டுகளே! மலட்டோவின் புதுவாழ்வையும் திரும்பப் பெற முயற்சியுங்கள்.

கம்யூனிஸ்டுகள் சந்தா வாங்குபவர்கள் என்று கழகம் தவருகச் சொல்லவில்லை. கட்சியின் மத்தியக் கமிட்டித் தீர்மானம் இருக்கிறது. யார் யார் எவ்வளவு சந்தா கொடுக்க வேண்டும்; அதை எப்படி லெவி முறையில் (உணவுக் கொள்முதல் போல இது சந்தாப் பணக் கொள்முதல்) வசூல் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் கழகத்தவர் அறியமாட்டார்கள் என்று நம் அனுதாபத்துக்குரிய ஜீவானந்தம்போன்ற 'இலக்கிய மேதைகள்' எண்ணியிருக்கலாம். அதையும் மக்கள் மன்றத்திற்கு, "வட சென்னை வட்டாரத்திற்கு" அடுத்து அறிவிப்போம்!

—கூடலரசன்

பொங்கல் மலருக்கு வெண்பாப் போட்டி

இந்த ஆண்டுத் "தென்றல்" பொங்கல் மலரில் குறிப்பிடத்தக்க சில வெண்பாக்களை வெளியிட இருக்கிறோம். இந்த வெண்பாக்கள் தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கவேண்டும். அதனல் போட்டியின் கருப் பொருளாக ஊர்களுக்குப் பெயர்கள் வந்த காரணத்தைக் கொள்ளக் கோருகிறோம்.

ஏதேனும் ஒரு ஊரின் தமிழ்ப் பெயரை எடுத்துக் கொண்டு, அந்தப் பெயர் அந்த ஊருக்கு எப்படி வந்தது என்பதற்கான காரணத்தை ஆதாரத்தோடு வெண்பாவாகத் தரவேண்டும். ஒருவரே பல ஊர்களைப்பற்றி எழுதலாம். ஆனல் ஊரும் பேரும் ஒரு வெண்பாவாலேயே முடிந்துவிட வேண்டும்.

நேரிசை வெண்பாவாகவே எழுதவேண்டுமென்பதில்லை. வெண்பாவின் எந்த இனத்தில் வேண்டுமானலும் எழுதலாம்.

பொய்க் கதைகளை ஆதாரங்களாகக் கொள்ளவேண்டாம். எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஆதாரம் வேண்டும்.

வெண்பாக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
"மலர் வெண்பா",
"தென்றல்",
சென்னை-6.

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

முன்கதைச் சுருக்கம் :

16-1-1801!

கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டுப் பதினைந்து திங்கள் களாய்விட்டன.

அவனது தம்பியர் ஊமைத்துரையும் சிவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையில் வாடுகின்றனர்.

அவர்களை விடுவிக்க நினைத்த இளைஞர் அணி ஒன்று ஒட்டநத்தத்தில் திரள்கிறது. சிவகெங்கை மறவர்குடியில் பிறந்த வீரத்தேவன் அவர்தம் தலைவன்; ஊமைத்துரையோடு நெடுநாள் பழகியவன்.

வீரத்தேவன் தலைமையில் 2-2-1801 அன்று பாளையங்கோட்டையில் அனைவரும் மாற்றுருவில் திரண்டு, சிறையைத் தகர்ப்பதென முடிவெடுத்துக் கலைகின்றனர்.

சின்னவேட்டூர் நாயக்கர், ஒட்டநத்தம் சுப்பா நாயக்கர், கடற்கரை நாயக்கர், குளத்தூர், காடல்குடி பாளையக்காரர்களின் பிரதிநிதிகள் ஆகிய பல முதியோர்கள் கலந்துகொண்ட அக்கூட்டத்தில், புதுக்கோட்டையிலும் எட்டையாபுரத்திலும் தமக்குப் பெருகியுள்ள ஆதரவைக் கூறுகிறான் ஊமைத்துரை. சிவகெங்கை அரசரின் உதவியை விடுதலைக்குப்பின் பெற முடிவு செய்கின்றனர்.

கூட்டம் முடிந்தபின் வீரத்தேவன் நண்பருடன் உரையாடுகையில், ஆறு மாதத்திற்குமுன் காணமற்போன தன் தங்கை கண்ணுத்தாளின் நினைவு வந்துவிட, கண்ணீர் வடிக்கிறான். நாட்டரசன்கோட்டையில் தங்கை காணமல் போனபோது அவன் கடம்பூரில் இருந்தான். செய்தி கேட்டு வந்த அவன் பித்தனாய் அலைந்தான், மூன்று திங்கள்கள். அவன் நண்பர் பலர் அவனைத் தேற்றி ஊமைத்துரை விடுதலைக்கான பணியில் ஈடுபடுத்தினர்.

17-1-1801.

சிங்கத்தேவன், கும்பினிச் சிப்பாயாக மாற்றுருவில் பாளையங்கோட்டைச் சிறைக்குள் புகுந்து ஊமைத்துரையைக் கண்டு தாக்கல் தெரிவித்துவிட்டு வருகையில் குழப்பமாகி, கும்பினிச் சிப்பாய்கள் அவனைத் தொடர்கின்றனர். தப்பியோடி வந்த சிங்கத்தேவன் ஒரு வீட்டினுள் ஏறிக்குதித்து, அங்கே ஏழாயிரம் பண்ணை ரங்கைய நாயக்கரின் மகள் சுப்பம்மாவைக் காண்கிறான். நாயக்கர், ஸ்ரீவைகுண்டம் நெற் கொள்ளையில் மாண்டவர்.

வீடு வீடாய்த் தேடிய சிப்பாய்கள் அவ்வீட்டையும் தட்ட, அவள் சிங்கத்தேவனை, சிப்பாய் உடையை அகற்றிப் படுக்கையில் படுக்கச் செய்கிறாள். பிணமாகக் கிடந்த அவனைக் கண்ட சிப்பாய்கள் ஏமாந்து வெளியேறுகையில் சுப்பம்மாவின் உறவினர் வீட்டினுள் நுழைந்து வேடத்தைக் கலைத்துவிடுகின்றனர். சிங்கத்தேவன் தப்பி ஓடித் தன் வீடடைகிறான். சுப்பம்மாள் கைதாகிறாள்.

வீட்டையடைந்த சிங்கத்தேவன் தன் மனைவி கண்ணுத்தாளிடம் நிகழ்ந்தவற்றைச் சொல்லிச் சிரிக்கிறான்.

வீரத்தேவனுக்கும் சிங்கத்தேவனுக்கும் மன வேறுபாடுண்டு. ஒரு முறை வீரத்தேவனின் தந்தை இராமலிங்கத்தேவரிடம் கண்ணுத்தாளை மணம் செய்து தர வேண்டினான், சிங்கத்தேவன். இராமலிங்கத்தேவர் மறுத்து ஏளனமாய்ப் பேசிவிட்டார். இந்தக் குறையோடு ஊமைத்துரையை விடுவிப்பதில் முன்னணியில் நிற்பவனாக வீரத்தேவன் காட்சியளிப்பது வேறு வருத்தத்தைத் தந்தது; சினந்தான்.

கண்ணுத்தாளை, வீரத்தேவன் இல்லாத வேளையில் கூட்டிக்கொண்டு வந்து மறைவாக வைத்துக்கொண்டான். அவள் இருவர் மன வேறுபாட்டையும் நீக்க முயன்றாள். வீரத்தேவன் சாவதைத்தவிர வேறு வழியில்லை என்றான் சிங்கத்தேவன்.

அதிகாலையில் சிங்கத்தேவனைத் தேடி பொம்மையாவுடன் வீரத்தேவன் அவன் வீட்டுக்கு வருகிறான். அண்ணன் வந்ததையறிந்தவள், ஓர் அறைக்குள் மறைந்துகொண்டாள். வீரத்தேவன் புறப்படுகையில் "அண்ணா" என்ற ஓலம்மட்டும் கேட்டது.

சிறையில் அடைபட்ட சுப்பம்மாவை காவலாளி ஒருவன், தன் காம விழிகளுக்குப் பலியாக்கிக்கொள்ள முனைய, அவள் தடுத்து வெல்கிறாள். இரவில் அவன் மறுபடி வந்தாலும் வரலாம் என எண்ணிய அவள் சங்கிலி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு, காத்துக் கிடக்கிறாள். பொம்மையா சிப்பாயாக மாற்றுருவில் உள்ளே நுழைய, "பழைய காமுகன்" எனத் தவறாக எண்ணிய சுப்பம்மா சங்கிலியால் அவனைத் தாக்க இரத்தக் காயம் ஏற்படுகிறது. பின்னர்க் காவலாளிகளிடம் தென்படாது தப்பி, சுரங்கம் ஒன்றின் வழியாகச் சிறைச்சாலையை விட்டு வெளியேறுகிறான். மேலே ஏற முனைகையில், அதே வழியாக உள்ளே இறங்க முயன்ற ஓர் இளைஞனையும் பெண்ணையும் தீவட்டியால் தாக்கிவிட்டு வெளியேறுகிறான்...

"அண்ணா" என்ற குரலைக் கேட்ட வீரத்தேவன் ஒன்றும் பேசவழியற்று, ஏதோ நினைத்து நெல்லை செல்கிறான்.

வீரத்தேவனைக் காணமுடியாத அவலத்தை எண்ணி, கண்ணுத்தாள் தற்கொலைக்கு முயன்று கிணற்றில் குதிக்க, சிங்கத்தேவன் காப்பாற்றுகிறான். அவன் அவள் செயலைக் கண்டு இளகி, தேற்றுகிறான்.

இதற்கிடையே, நெல்லையிலிருந்து திரும்பும் வீரத்தேவன் பொம்மையாவைக் காண்கிறான். சுப்பிரமணிய பிள்ளையிடம் ஊமைத்துரை விடுதலைக்குக் கடனாகப் பணம் கேட்டதையும், அவர் ஊமைத்துரையின் கையெழுத்தைப் பெற்றுவரச் சொன்னதையும், அதைப் பெறச் சிறைக்குள் சுரங்க வழியாக அவரது மகனும் மருமகளும் சென்றிருப்பதையும் சொல்கிறான். பொம்மையா கல்லாகிறான். தான் சுரங்கத்தில் தாக்கிவிட்டு வந்த இளைஞனும் பெண்ணும் அன்னாராகவே இருக்கக்கூடுமென்று கருதி அழுது சொல்கிறான். அதைக் கேட்ட வீரத்தேவன் சினக்க, பொம்மையா மறுபடியும் சிறைசென்று செய்தி அறிய முயன்று தானாகவே காவலர் கையில் சிக்குகிறான். சுப்பிரமணிய பிள்ளை மகன் இராமையா தீப்பட்டதால் இறந்துவிட, முகப்புண்பட்ட அவன் மனைவி இலட்சுமி அழுவதையும், சவம் சுடலை செல்வதையும் அறிகிறான். வீரத்தேவன் இடைவழியில் வந்து சேர்கிறான். வீரத்தேவன் துடிக்க, காவலர் கதற, இலட்சுமி உடன்கட்டை ஏறுகிறாள். வீரத்தேவன் நடுகல் நாட்டிவிட்டுச் செல்கிறான்.

இந்தக் காலத்தில்...

சிவகெங்கைச் சீமை பல படையெடுப்புகளுக்கும் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுத்துத் தலைநிமிர்ந்து நிற்கிறது. இரண்டாயிரம் சதுரக் கற்கள் பரப்புள்ள சிவகெங்கைச் சீமை 1730 வரை இராமநாதபுரம் சீமையோடு இணைந்து கிடந்தது. அவ்வாண்டுமுதல் சுவான துரைராசன் எனப்பட்ட சசிவர்ணத் தேவரின் ஆட்சியில் சிவகெங்கைச் சீமை தனி ஆட்சி அமைத்துக்கொள்கிறது. அவரது பரம்பரையில் வந்தவர் முத்துவடுக பெரியஉடையணத் தேவர் ஆவார். அவர் தன் மனைவி வேலுநாச்சியாரோடு ஆண்டு வருகிறார். பொன்னுத்தாளுக்கும் மொக்கப் பழனியப்ப சேர்வைகாரருக்கும் பிறந்தோரான மருதிருவர் முத்துவடுகரின் கண்களாகவும் கைகளாகவும் விளங்குகின்றனர். மொக்கப் பழனியப்ப சேர்வை இராமநாதபுரச் சீமையின் வலிவு மிக்க படைத் தளபதி.

கும்பினியார் துணையுடன் கள்ள வழியில், ஆற்காட்டு நவாப் மகன் காளையார் கோவிலில் இருந்த மன்னர் முத்துவடுகத் தேவரையும் இளைய ராணியையும் கொன்றுவிடுகின்றான்.

நாடு, மீகாமன் இல்லா அலைகடல் கலமாயிற்று. மருதிருவர் பெரிய ராணியார் வேலுநாச்சியார் உடன் திண்டுக்கல் செல்கின்றனர். அங்கிருந்த ஐதர் அலியின் துணைபெற்று (திப்பு சுல்தானும் தங்கியிருந்ததாகச் சொல்வர்) மதுரை வழியாக சிவகெங்கை வருகின்றனர். மதுரையிலும், சிலைமானிலும் அன்னார் மேற்செல்லாதவாறு தடுத்த நாயக்கர்களான மல்லாரிராயனையும் ரங்கராயனையும் மாய்த்துவிட்டு முன்னேறுகின்றனர். முத்தனேந்தல் வழியாக, தம்முடன் சேர்ந்த நாட்டு மக்களையும் அழைத்துக்கொண்டு காளையார் கோவில் நோக்கி விரைந்த மருதிருவர், மானாமதுரையில் பரங்கிப் பகை பதுங்கியிருப்பதை அறிந்து திருப்பித் தாக்குகின்றனர். பல இடையூறுகளுக்குப்பின் காளையார் கோவில் சேர்ந்து மாண்ட மன்னருக்கும் இளையராணிக்கும் மாலையிடு கட்டி வணங்கிவிட்டு சிவகெங்கை சேர்ந்து அமைதி காண்கின்றனர். கப்பத்திற்கு ஆசைப்பட்ட நவாபுவின் வாயில் மண்ணைப் போடுகின்றனர்.

ராணி வேலுநாச்சியார் அரசியாகவும், சின்னமருது பிரதானியாகவும், பெரியமருது தளகர்த்தனாவும் ஆண்டு வருகின்றனர்.

காலவெள்ளம் நாச்சியாரைக் கொள்ளை கொள்கிறது. ஆட்சியை, பெரிய மருதுபாண்டியரிடம் ஒப்படைத்து இறக்கிறார், நாச்சியார். முத்துவடுகத்தேவரின் உறவினரான சக்கந்தி வெங்கணப் பெரிய உடையார் என்பவருக்கு முடிசூட்டித்தான் ஆட்சியைக் கவனிக்கின்றனர் மருதிருவர். என்றாலும் "சேர்வைக்காரரான மருதிருவர் தேவர் வம்ச ஆட்சியை ஆள்வதா?" என படமாத்தூர் ஒய்யத்தேவர், அவரது தம்பி முத்துவிஜயரகுநாத உடையணத் தேவர் ஆகியோர் எதிரணி அமைத்தனர். மருதரசர் அவற்றை எல்லாம் பொறுத்தார்.

நாடு செழித்தது; அமைதி தவழ்ந்தது; மேஜர் வெல்ஸ்போன்ற ஆங்கிலத் தளபதிகளும் மருதரசரின் நட்பையே நாடி நின்றனர். மருதரசர்

ஆங்கிலேயர் உள்பட யாருக்கும் கப்பம் கட்டாது ஆண்டனர்.

நாடெங்கும் கலை வளர்ந்தது; கவி முழங்கியது; மக்கள் உளம் மகிழ்ந்தது.

பெரியமருதுபாண்டியர் தம்மனைவியர் நால்வருடன்—பட்டத்து ராணி ராக்காத்தாள் ஆவார்-அறம் வளர்த்தார்.

பதவி வெறி கொண்ட படமாத்தூர் கௌரிவல்லபத்தேவர் நாட்டில் கொலை, கொள்ளை முதலிய கொடுமைகளைத் தூண்டியும், மருதரசர் அவற்றை மாய்த்தனர்.

இன்னும் எத்துணையோ சிவகெங்கைச் சீமையின் புகழ். அந்தச் சீமைக்குத்தான், பாளையங்கோட்டையிலிருந்து, புறப்பட்ட வீரத்தேவன் வந்து சேர்ந்தான்.

வழிப்போக்கர் விடுதியில் தங்கினான். விடுதியின் காவல்காரர் ராமசாமித்தேவரும், அவர் மகள் அஞ்சுகமும் அவனை மகிழ்விக்கின்றனர்.

அஞ்சுகமும் அவனும் புதிய பாதையில் அடி எடுத்து வைத்துவிட்டனர்.

காலையில் மருதரசரைக் காண, ராமசாமித்தேவருடன் செல்கிறான்; காண்கிறான்; ஊமைத்துரையே விடுவிக்கப் பண உதவி வேண்டுமென்கிறான்; மாலையில் முடிவு சொல்வதாக வழியனுப்புகிறார். ஆனால் வெளியில் வருகையில் கறுத்தான் என்பான் கூறிய பேச்சு, இடியாகிறது.

மருதரசரை மாலையில் சென்று காண்கின்றனர், வீரத்தேவன், ராமசாமித்தேவர், அஞ்சுகம் ஆகியோர். தடைக்கல்லாகக் கறுப்பன் தலையிடுகிறான். பெரியமருதரசர் துணை செய்யாதவாறு தடுக்கிறான் கறுத்தான். ராணியார் அரசரை அழைக்கிறார். ஏதோ சொல்ல. அதே நேரத்தில் மேஜர் வெல்ஸ் வந்திருப்பதாகத் தாக்கல் வருகிறது. நோக்கம் என்ன...?

தொடர்ந்து படியுங்கள்...

★

சேவகனைப் பார்த்து "அவரை மண்டபத்தில் உட்கார வை!" என்று சொன்ன மருதரசர் அந்தப்புரத்திற்குள் நடந்தார். எதிர்கொண்ட ராணி ராக்காத்தாள் ஊமைத்துரைக்கு உதவி செய்யும்படி மருதரசரை வேண்டினாள். அஞ்சுகமும் இதை அருகில் நின்று கவனித்துக்கொண்டிருந்தாள். ராக்காத்தாளுக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் முடிவாக "பார்க்கலாம்" என்று சொன்ன மருதரசர் திரும்பிச் சலவைக்கல் மண்டபத்திற்குள் நடந்தார்.

மேஜர் வெல்ஸ் அங்கே தன் பரிவாரங்களோடு அமர்ந்திருந்தான். பெரிய பாண்டியரைக் கண்டதும் ஓடி வந்து தழுவிக் கொண்டான். தன் நாட்டிலிருந்து கொண்டு வந்திருந்த பலவித ஆடையணிகளைப் பெரியபாண்டியருக்கு வழங்கினான். தன் பழைய நண்பரை மீண்டும் காணப்பெற்றதற்கு வெல்ஸ் மகிழ்ச்சி தெரிவித்தான். சின்ன மருதுவைப்பற்றி விசாரித்தான். அரண்மனை சிறுவயலுக்குப் போயிருப்பதாகவும் சிறிது நேரத்தில் திரும்பக் கூடுமென்றும் பெரியபாண்டியர் பதிலளித்தார்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே சிறு வயலிலிருந்து சின்னமருது வந்து சேர்ந்தார். வெல்ஸைக் கண்டதும் சின்ன மருதுவுக்கும் உற்சாகம் பிறந்தது. சின்னமருதுவுக்கு உற்சாகம் பிறக்கிறதென்றால் இரண்டு வளரிக்கம்புகளாவது முறியும். வெல்ஸைக் கண்ட ஆனந்தத்தில் கையிலிருந்த வளரியைத் துடையில் தட்டி முறித்துப் போட்டுக் கையை நீட்டினார் சின்னமருது. வெல்ஸ் கை கொடுத்தான்.

"நாம் எப்போதும், இப்படி நண்பர்களாகவே இருப்போம்!" என்றான். இவற்றை எல்லாம் ஒரு பகுதியில் நின்று கவனித்துக் கொண்டிருந்தார் வீரத்தேவன். வெள்ளையருக்கு மருதுபாண்டியரிடம் உள்ள மரியாதையைக் கண்டு பிரமித்தான். இது பயத்தால் விளைந்ததா, பாசத்தால்

விளைந்ததா என்பதே அவனுக்குப் புரியவில்லை. பாஞ்சாலங்குறிச்சியைக் கருவறுத்த பிறகும் ஒரு பாளையக்காரனிடம் வெள்ளையர்கள் இவ்வளவு மரியாதையாய் நடந்துகொள்வதுண்டா? இனி, தென்பாண்டி மண்டலத்தில் எந்தப் பாளையத்தையும் வெல்வது அவர்களுக்குச் சுலபம்தானே? மருதரசரிடம் வீரத்தேவனுக்கிருந்த மரியாதை பன்மடங்கு வளர்ந்தது.

மேஜர் வெல்ஸ் பெரியபாண்டியரிடம் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் அவன் கவனித்துக் கேட்டான். "இலண்டனில் இங்கிலீஷ் கொடி பறக்கின்ற வரை, சிவகெங்கையில் உங்கள் கொடியே பறக்கும்!" என்றான் வெல்ஸ். கும்பினியாருடைய மொத்தக் கருத்தையே, அவன் பிரதிபலித்தான். சிவகெங்கையின் உரிமை தன்னைச் சார்ந்ததென கௌரிவல்லபத்தேவர் வாதாடிக்கொண்டிருப்பதையும், அவர் சென்னைக்கு வந்து கவர்னரைப் பேட்டிகண்டதையும், ஆயிரம்தான் காரணங்களைக் காட்டினாலும், மருதுபாண்டியர் பரம்பரை உள்ளவரை சிவகெங்கை அவர்களுக்குத்தான் என கவர்னர் சொல்லிவிட்டதை, வெல்ஸ் ஆங்கிலத்தில் சொல்ல, இருமொழிக்காரன் (துபாஷ்) மொழி பெயர்த்தான்.

மருதரசர்கள் வெல்ஸுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். பெரிய பாண்டியரும் வெல்ஸுக்குப் பலவகையான பொருள்களைப் பரிசளித்தார். வெல்ஸ் விடை பெற்றுக் கொண்டான்.

அவர்கள் சென்றதும் சின்ன மருது "பாளையங்கோட்டையிலிருந்து வந்த தூதுவன் போய் விட்டானா?" என்று பெரிய மருதுவைக் கேட்டார்.

"இல்லை! விடுதிக் காவல் இராமசாமித்தேவரும் அவனும் முன் முகப்பில் உட்கார்ந்திருக்கின்றனர். நான் கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்" என்றார் பெரியபாண்டியர்.

சின்னமருது வேகமாக முன் முகப்பிற்குச் சென்றான். அங்கே இராமசாமித் தேவர் மட்டும் இருந்தார். அவரிடம் "பாளையங் கோட்டைத் தூதுவன் எங்கே?" என்று கேட்டார், சின்னமருது. "இங்கேதானே நின்றார்!" என்ற இராமசாமித்தேவர் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தார். வீரத்தேவனைக் காணவில்லை. அங்கும் இங்குமாக அலைந்து அரண்மனை முழுவதும் தேடினார். எங்கும் வீரத்தேவன் தென்படவில்லை.

அந்தப்புரத்திலிருந்த அஞ்சுகமும் இதை அறிந்தாள். அவளும் வீரத்தேவனைத் தேடினாள். சின்னப்பாண்டியர் இராமசாமித் தேவரைப் பார்த்து "ஒரு லட்சம் பூவராகனுக்கே நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதற்குத்தான் அரண்மனை சிறுவயலுக்குச் சென்றேன். சிறுவயல் முத்தப்பச் செட்டியார் கையெழுத்தில்லாமலே இந்தக் கடனைக் கொடுக்கச் சம்மதித்திருக்கிறார். அதற்குள் இந்தத் தூதுவன் எங்கே போனான்?" என்றார். தேவர் திகைத்தார். "நான் எப்படியும் தேடிப் பிடிக்கிறேன். ஒருவேளை தெருப்பக்கம் போயிருக்கக்கூடும்." என்று கூறிவிட்டுத் தெருவை நோக்கி நடந்தார். அஞ்சுகமும் அவர் பின்னாலேயே சென்றாள்.

நம்பிக்கையற்று அரண்மனையை விட்டு வெளியேறிய வீரத்தேவன், கால்போன போக்கில் சிவகெங்கைத் தெருக்களிலே நடந்து சென்றான். ஒரு தெருவில் ஒரு சுவரில் "இங்கே வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும்" என்று எழுதியிருந்தது. அதிலேகூட வீரத்தேவனுக்குச் சபலம் தட்டியது. ஆனால் முன் பின்னறியாதவர்களுக்கும், ஊர் பேர் அறியாதவர்களுக்குமா, கடன் கொடுப்பார்கள்? தன் சபலத்தை எண்ணி விரக்தியோடு நடந்தபடி மேலும் சென்றான் வீரத்தேவன்.

அஞ்சுகத்திடம்கூடச் சொல்லிக்கொள்ளாமல் நேரே பாளையங்கோட்டைக்குச் சென்றுவிட அவன் முடிவுகட்டினான். அவன் மனம் அவ்வளவு சலித்துப் போயிருந்தது. ஓரிடத்தில் கறுத்தானைச் சேர்ந்தவர்கள் சிலர் கூடி நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களிலே ஒருவன் வீரத்தேவனைக் கையைக் காட்டி "இவன்தான்!" என்றான். இன்னொருவன் "ஒன்பது கம்பளத்தான், ஊரைச் சுற்றி வம்பளத்தான்!" என்றான். மூன்றுமவன் "போங்கடா போங்க, போக்கற்ற பயலுகளா! ஊமைத்துரை சிக்கிலே, சிறைச்சாலையிலே, செத்துப்போயிட்டான். நீங்க ஏன் கிடந்து அலையறிக?" என்றான். வீரத்தேவன் இரத்தம் கொதித்தது கைகள் துடித்தன. என்றாலும் இருக்கும் இடத்தையும் சூழ்நிலையையும் எண்ணி, மேலே நடந்தான். சிவகெங்கையில் அவன் இமைப்பொழுது தாமதிக்கவும், விரும்பவில்லை. நேரே விடுதிக்கு வந்து, குதிரையில் ஏறி யாரிடமும் சொல்லாமல் புறப்பட்டு விட்டான்.

விடுதி உட்பட நகரெங்கும் அவனைத் தேடி அலைந்துவிட்ட இராமசாமித் தேவர், அஞ்சுகம் பின்தொடர, சின்னப்பாண்டியரை மீண்டும் சந்தித்து, வீரத்தேவன் காணாத செய்தியைச் சொன்னார். அஞ்சுகம் கண் கலங்கி நின்றிருந்தாள். சின்ன மருது ஏதோ யோசித்தார்; ஏதோ முடிவுக்கு வந்ததுபோலத் தலையை ஆட்டினார். எந்த விளைவுக்கும் தயாரானவர் போலக் காணப்பட்டார். "சிவகெங்கையின் வரலாற்றில் ஒரு துயர ஏட்டைத் திறந்து வைக்கிறோம்" என்னும் எண்ணமின்றி ஒரு துணிச்சலான முடிவிற்கு வந்தார்.

தொடரும்

புலித்தேவனு, கட்டபொம்மனு?

4

வீரபாண்டியக் கட்டபொம்மன் தமிழ் நிலத்தில் வாழ்ந்தவன்; அரசாண்டவன். ஆனல், பிறப்பாலோ, பிறவற்ருலோ தமிழனல்ல-ஆந்திரன். அவனுடைய முன்னேர்களும் சரி, அவனும் சரி, அவர்களுடைய உறவினர்களோடேயே உறவு வைத்துக் கொண்டார்களேயல்லாது, திருமணம் முதலிய எவ்வகையாலும் அப்பகுதியில் வாழ்ந்த பிற (தமிழ்) ஜாதியாரோடு கலந்து விடவில்லை. அதுவும் அந்தக் காலம் முறையான ஜாதி அமைப்பை, சனுதனத்தைத் தவருமல் பின்பற்றி வந்த காலம். தவிரவும், அவனும் அவனைச் சார்ந்தவர்களும் தங்கள் இல்லங்களிலும், தங்களுக்குள்ளும்பேச உபயோகித்தது தமிழ் மொழியல்ல. அவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய ஒருவித கலப்புத் தெலுங்கு மொழியை அவர்கள் பேசிக்கொண்டார்கள். வெளி விவகாரங்களில் மட்டுமே அவர்கள் தமிழைக் கையாண்டார்கள்.

எவ்வகையாலும் கட்டபொம்மனிடம் அவனது மூதாதையர்களான ஆந்திரர்களின் சாயல் படிந்தே இருந்தது. அவர்களின் வழிமுறையினரின் பெயரும்கூட தமிழ்ப் பெயராக அமையாமல், 'கட்டபொம்மு' என்ற தெலுங்குப் பெயரே தமிழில் திரிந்து வழங்கியது. ஆகிய இவை எல்லாவற்றையும் நோக்கும்போது, கட்டபொம்மனும், அவனது பரம்பரையும் தமிழ்க் குடியினர்அல்ல என்பது தெளிவாகும்.

இந்தக் கருத்தை திரு. ம. பொ. சி. அவர்களே மறுக்கவில்லை. ஏனென்ருல், திரு. ம. பொ. சி.யும் சரி, கட்டபொம்மன் வரலாறு எழுதிய மற்றவர்களும் சரி கட்டபொம்மன் ஆந்திரன் என்பதைத் தெளிவாகவேகுறித்துள்ளார்கள்.

வேறு மொழிக்காரர்கள் ஒரு பகுதியில் குடியேறிப் பல ஆண்டுகள் கடந்துவிட்டால், அவர்கள் அந்தப் பகுதி மொழியாளர்களாக-இனத்தாராக ஆகிவிடுவார்கள் என்பது முழுவதும் ஒப்புக்கொள்ளமுடியாத ஒரு விஷயமாகும். பல காலத்துக்கு முன்னல் குடியேறியவர்களான கட்டபொம்மன் பரம்பரையினர் தமிழர்களாகிவிட்டார்கள் என்று சிலர் வாதாடத் தொடங்கினல், அதில் முழு நியாயமும் இருக்கிறதா என்பது சந்தேகத்திற்குரிய ஒரு விஷயமாகும் உதாரணமாக, இரண்டு தலைமுறைக்கு முன்னல் இந்தியத் துணைக்கண்டத்தில் குடியேறிய ஒரு ஆங்கிலேயர், அவரைப் போலவே வந்த ஆங்கிலேயர் வீடுகளிலேயே உறவு வைத்துக்கொண்டு,- அங்கேயே தமது திருமணத்திற்கான பெண் கொண்டு, தொடர்ந்து தமது மொழி பேசி, தம் பகுதி நடைமுறைகளையே கைக்கொண்டால் எப்படி அவர் இந்தியத் துணைக் கண்டத்துப் பகுதியினராக முற்றிலும் கருதப்படுவார்? ஆகிய இவற்றைக் காட்டி, கட்டபொம்மன் ஆந்திரனல்ல தமிழனே என்று வாதிட யாரும் முன் வரமாட்டார்கள். நிற்க,

தமிழர்கள் தவிர பிறரைப் பற்றிப் பேசுவதையே இழுக்கு என்று கருதுகிற, பெருமையாக நினைப்பதே தவறு என்று எண்ணுகிற திரு. ம பொ. சி., ஆந்திரன் என்று தெளிவுபடுத்தப் படுத்தப்பட்டுவிட்ட கட்டபொம்மனைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவதுதான் நமக்கு விந்தையாகப்படுகிறது. அதிலும் குறிப்பாக, ஆந்திர சகோதரர்கள் நம்மைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிருர்கள் என்ற கருத்தை வலுக்கட்டாயமாக தமிழர்களிடத்தில் திணித்துப் பழகியிருப்பவர் திரு. ம. பொ. சி. என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. சென்னை நகர்ப் பிரச்னையில், அது தமிழர்களுக்கே உரிமையானது என்ற நியாயமான உண்மையைச் சொல்ல வந்த அவர், தி. மு. கழகம் போன்ற பிற கட்சிகளைப்போல் அந்த உண்மையை மட்டுமே சொல்லாமல், அதற்குப் பெரும் அளவு முட்டுக்கட்டை போடுபடுவர்கள் ஆந்திரர்கள் என்று கூறி, எல்லைப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களையும் ஆந்திரர்களையும் நட்பற்றவர்களாக ஆக்கிவிட்ட கதையும் இன்னும் நமக்கு மறந்துவிடவில்லை.

அதே திரு. ம. பொ. சி. தான், வீரபாண்டியக் கட்டபொம்மனை மாவீரன் என்று புகழ்கிருர்; மதிக்கப்பட வேண்டிய தலைவன் என்கிருர்; மகத்தானதோர் முன் மாதிரியாக இந்திய விடுதலைக் கிளர்ச்சிக்கு அமைந்தவன் கட்டபொம்மன் என்பதையும் சொல்கிருர்.

ஆந்திரரைப் பிடிக்காத, அவர்களை அலட்சியப்படுத்துகிற, ஆந்திரரும் தமிழரும் இணைவதை ஆட்சேபிக்கிறஅதேதிரு.ம.பொ. சி.யின் இந்த விந்தைக்குரிய செயல், நமக்கு வேடிக்கையாகப் படுகிறது.

திரு. ம. பொ. சி. மற்றவர்களைப் போல் தென்னடு என்று குறிப்பிட்டுவிட்டு கட்டபொம்மனைக் காட்டினல், அதிலே நியாயம் உண்டு. ஆனல் அவரோ, அதற்கு எதிரிடையான தமிழ் அரசாளர். இந்தியா என்று சொல்வதை விரும்பினலும் விரும்புவாரே தவிர, திராவிடம், தென்னடு என்று சொல்வதை அவர் விரும்பியதே இல்லை; விரும்புவதாகக் காட்டிக்கொள்ளவும் விரும்பாதவர் அவர். அத்தகையவர் இத்தகைய சேதியை வெளியிடுகிருர்!

இந்த நேரத்தில் வீரபாண்டியன் விடுதலை வீரன்தான என்ற கேள்வியை எழுப்பி, விடை தேட நாம் முயல வேண்டியதில்லை; அதைப் பின்னல் பார்த்துக்கொள்ளலாம். ஆனல் வீரபாண்டியன் தமிழன, அல்லவா என்பது தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். அந்தத் தீர்மானத்தை நாம் கொஞ்சங்கூட நெருங்குவதற்கு வழியில்லாமல், அவனைப்பற்றி எழுதிய எல்லோருமே அவன் ஆந்திரன் என்று தெளிவுபடுத்திவிட்டார்கள். ஆக, வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற ஒருவன் இருந்தான் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அவன் ஆந்திரர்களின் வழி வந்தவன் என்பது.

அத்தகைய ஆந்திரக் கட்டபொம்மனை, தமிழர் அரசுக்கு (அல்லது தமிழ் அரசுக்குப்) பாடுபடும் திரு. ம. பொ. சி. தீவிரமாக ஆதரிக்கத் துவங்கிவிட்டார்.

இப்போதுதான் திரு. ம. பொ. சி.பற்றி நமக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

யாராவது ஒரு சிறந்த வீரனைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, அவன் புகழ் பாடுவதன் மூலம்

ப. புகழேந்தி

சிலர் தங்கள் பெயர்களை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்திக் கொள்ள முடல்வதுண்டு. அந்த சிலர் எவ்வளவு சாதாரணமானவர்களாக இருந்தாலும், அவர்களால் அம்பலத்திற்கு கொண்டு வரப்பட்டு, புகழப்படும் அவ் வீரன் எல்லாத் தகுதிகளும் நிரப்பப் பெற்றவனகையால்அவனுடைய பெயரோடு, அவர்களுடைய பெயரும் வெளித் தெரிவதற்கு இயற்கையாகவே வசதி ஏற்படுகிறது.

சிலர் சொல்வதுபோல, மாவீரனை கட்டபொம்மனின் பெயரோடு தன்னுடைய பெயரும் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற ஆசை மிகுதியால், திரு. ம. பொ. சி. இந்தப் பிரச்னையில் ஈடுபட்டார் என்று நாம் சொல்லத் தயாராயில்லை. ஏனென்ருல் கட்டபொம்மனின் பெயரைச் சொல்லித்தான் தன்னுடைய பெயரை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கிற அளவுக்கு அவர் மக்களுக்கு கொஞ்சம் கூடத் தெரியாதவரல்ல.

எனவே, மொத்தத்தில் திரு. ம. பொ. சி. தனது நடைமுறைகளை மறந்து, தமது கருத்துக்கு மாருன ஒருவனை—அவரால் ஆதரிக்கப்படாத மற்ருெரு இனத்தானை, விடுதலை வீரன் என்று குறிப்பிட்டுவிட்டார் என்ற உண்மையை நாம் துணிந்து வெளியிடலாம்.

இனி, புலித்தேவன்பற்றிப் பார்ப்போம்.

— தொடரும் —

ஜூபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: அ. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

அடுத்த இதழில் வருவன...

அ. சண்முகக்கவி
தமிழ்: பண்பு
எனும் தலைப்பில்
அரங்கேற்றிய கவிதை.

உருசிய எழுத்தாளர்
டாக்டர்
போரிஸ் பாஸ்டர்நாக்
வாழ்க்கை வரலாறு.

வெண்பாப் போட்டி-31.

தனிச்சீர், "மீன்கொடியோன்" என்று வரும்படி வெண்பா எழுதுக.

வழி :

___ ___ ___ ___
___ ___ ___ —மீன்கொடியோன்
___ ___ ___ ___
___ ___ ___.

முடிவு தேதி: 29-11-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

வாள்வாய் மாற்றி வல்லிய முழவுத்
தோளோன் கவரி வீசியே நின்றனன்
என்றால் இச்செயல் எதனைக் குறிக்கும்?
இன்பத் தமிழின் பெண்மைக் காதலில்
தன்னை மறந்து தன்னினை மறந்து
மன்னவன் மயங்கிக் கிடந்ததை யன்றோ?''

பல்லவ மன்னனும் நந்தி வர்மனைக்
கொல்லும் நோக்கொடு குளிர்தமிழ்க் கவியால்
நந்திக் கலம்பகம் நல்கினன் குலமகன்;
நந்தியோ கலம்பகம் உயிர்கொளும் நஞ்சென
அறிந்தும் தன்னுயிர் பெரிதென எண்ணிலன்;
சிறந்த செந்தமிழ் நந்திக் கலம்பகம்
தன்னைப் பாடுக சாவெனும் ஏற்பேன்
என்றே கூறி எழிற்கவிக் கலம்பகம்
தன்னைக் கேட்டு இன்னுயிர் நீத்தனன்!
என்றொரு கதையுண் டித்தமிழ் நாட்டில்
தமிழ்க்கவி நந்தியைக் கொன்றதா? ஐயகோ!
அமிழ்தம் உயிரை அழித்திடும் என்றால்
கேட்டவர் கைகொட்டி நகைப்பரே யன்றோ?
ஈட்டு புகழோன் எழிற்கோ நந்தியின்
ஆருயிர் பறித்தது யாதெனக் கேட்பீர்
கூறுவேன் நீவிர் கொள்ளுக சிந்தையில்:

மாறுகொள் கருத்துக் குலமகன் சொன்னான்,
''நூறு பந்தர்கள் வேய்ந்திட வேண்டும்
முதலாம் பந்தரில் மன்னவன் அமர்ந்ததும்
முதலாம் பாடல் பாடப் பெறும்;பின்
பாடல் முடிந்ததும், பந்தர் எரிந்திடும்
பீடுறும் கலம்பகப் பாடல் யாவையும்
இந்த வண்ணமே கேட்டிட வேண்டும்
அந்திமப் பாடல் முடிந்ததும் புகழ்சேர்
செந்தமிழ் நந்தி செத்தொழிந் திடுவான்
இந்த முடிவை ஏற்பான் என்னில்
கலம்பக இன்பந் துய்த்து மகிழலாம்''
புலவனின் இச்சொல் புரவலன் நெஞ்சில்
திண்மை பெற்றது; 'எண்ணிய யாவும்
எண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்ணியர்
ஆகப் பெறின்'என் றறைந்தநற் கொப்ப
போகப் பெருமான் நந்தி மாண்டனன்.
என்றே நாமெலாம் எண்ணுதல் பொருந்தும்.
அன்பீர் சொல்லுக நந்தியைக் கொன்றது
அருமைத் தமிழா? அன்னவன் ஆருயிர்
பிரித்தது நச்சுக் கவியெனல் அறிவா?
இந்தச் செய்தி நந்திக் கோமான்
செந்தமிழ்ப் பெண்மையிற் கொண்ட காதலை
உணர்த்துவ தன்றோ? யாரே இதனை
உணர்ந்திட மறுப்பவர்? உளரோ எவரும்?

மங்கையர் சுகமே யல்லால் மறுசுகம்
எங்கே யுண்டு? என்ற புலவனும்
பெண்கள் உலகையே பேயுல கென்று
எண்ணுக என்றே இனிய பாடல்கள்
பாடிய சிலரும் பைந்தமிழ் தனிலே
சூடினர் கவிமலர் எனிலவர் செந்தமிழ்ப்
பெண்மையிற் கொண்ட பேரருட் காதலே
அன்றோ? இதனை யாரே மறுப்பவர்?
'தமிழே உன்னால் இருந்தேன்; பெறற்கரும்
இமையோர் அமிழ்தம் எனினும் வேண்டேன்'
என்றொரு புலவன் இயம்பின னென்றால்
இன்றமிழ்ப் பெண்மையிற் கொண்ட காதலால்
பேசிய பேச்சே இதுவெனச் சற்றும்
கூசா திங்கே கூறலா மன்றோ?
நல்லியல் பினரே! இத்துணை நேரம்
வெல்லத் தமிழ்மொழிப் பெண்மைக் காதலால்
என்கவி கேட்டிருந் தோர்க்கு
நன்றியும் அன்பும் வணக்கமும் உரித்தே.

★

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

அங்கே வந்துவிடுங்கள். நான் அவசியம் வருகிறேன்'

'அரண்மனையில் அழைத்தால்.....'

'இல்லை; நான் ஏதாவது சாக்குச் சொல்லி சமாளித்துக்கொள்ளுகிறேன்!'

'சரி, நான் உன்னைக் கண்டிப்பாக எதிர்பார்த்துக் காத்திருப்பேன். ஏமாற்றிவிடாதே!'

அவர்கள் எதிர் எதிர் திசைகளில் நடந்தார்கள்.

★

'கவிதைப் படிப்பதைக்கூட என்னால் ஒருநாள் நிறுத்தமுடிகிறது. ஆனால் உன்னைக் காணமலிருக்க முடியவே இல்லை...'

'எனக்கு மட்டும் உங்களைப் பார்க்கக்கூடாது என்ற எண்ணமா என்ன! எனது கலை உணர்வை வளர்த்து, நடனராணியாக என்னை ஆக்கிவைத்தவர் மன்னர். அநாதையான என்னைவளர்த்து ஆளாக்கியவர் அவர். நாட்டியத்தின்மீது அவருக்கு மிகுந்த பிரியம். எப்பொழுது அவர் நினைக்கிறரோ அப்பொழுதெல்லாம் நான் ஆட வேண்டும்; பாட வேண்டும்...'

'அப்படிப்பட்டவரிடமிருந்து உன்னைப் பிரிப்பது எப்படி? நமது மணவாழ்வுக்கு அவர் ஒப்புதல் தருவாரா?'

'எனக்கு அதில் அவ்வளவு நம்பிக்கை இல்லை!'

'வேறு வழி?'

'எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இன்னும் பதினைந்து நாட்களில் மன்னரின் முடிசூட்டு விழாவின் ஆண்டுவிழா நடைபெறவிருக்கிறது. அதில் ஒரு சிறப்பான அம்சமாக காவியப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விரும்பிய பரிசை மன்னரிடம் கேட்கலாம். மன்னர் வாக்குத் தவறுதவர். நீங்கள் அந்தப் போட்டியில் வெற்றி பெற்று, என்னையே பரிசாகக் கேட்டால் அப்பொழுது மறுக்கமுடியாதல்லவா அவரால்!...'

'நல்ல யோசனைதான். ஆனால் பதினைந்து நாட்களுக்குள் ஒரு காவியம்; அதிலும் போட்டியில் வெற்றி பெறக்கூடிய காவியம் ஒன்றை உருவாக்குவதென்பது அவ்வளவு சாதாரணமான காரியமல்ல!'

'தெரியும் எனக்கு. ஆனாலும் நமது எண்ணம் நிறைவேற அதைத்தவிர வேறு வழியில்லை. நீங்கள் வெற்றி பெற்றுவிட்டால், எவ்விதப் பயமும் இல்லாமல் எவ்வளவு இன்பமாக நாம் வாழமுடியும் என்பதைஎண்ணிப் பார்த்தீர்களா?'

'ஆமாம்; அதுதான் சரி. நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் ஒரு தனிக் காவியமாய் உலவும் நீயே கிடைப்பதானால், பதினைந்து நாட்களென்ன, பதினைந்து நாழிகைக்குள்ளாகவே காவியம் எழுத 'நான் தயங்கமாட்டேன்!'

'இந்தப் பதினைந்து நாட்களும் அனேகமாக நாம் சந்திக்கமுடியாது என்றே கருதுகிறேன். விழா நெருங்கிக்கொண்டிருப்பதால், ஆட்களின் நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது. அதோடு, நீங்கள் காவியம் எழுதி முடித்தாக வேண்டுமல்லவா-என்னைப் பார்க்க வந்துவிட்டால் அதற்கு நேரம் ஏது? வெற்றி பெற்ற அன்று, பரிசுப் பொருளாகிய நானே உங்கள் முன் வந்து நிற்பேன்!'

'நான் வெற்றி பெறுவேன். நாம் வாழ்வு தொடங்குவோம்'

அப்பொழுது யாரோ விரைவாகச் செல்லும் காலடி ஓசையை அவர்களில் யாரும் கேட்கவில்லை. அவர்கள் பிரிந்தார்கள்.

★

நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. வீதிகளெங்கும் தோரணங்கள். விறுவிறுப்பான நாடகத்தின் இறுதிக் காட்சிபோல எங்கும் உற்சாகம்; பரபரப்பு. தாரை தப்பட்டைகள், யாழ், முரசு இவற்றின் தனித் தனி முழக்கங்கள். மகிழ்ச்சியின் பேரொலி எங்கும்.

இலக்கிய மண்டபம் முழுமையும் மக்கள் நிறைந்திருந்தனர். போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்த கவிஞர்கள் ஒரு புறமும், ஆட்சியில் உயர்ந்த உத்தியோகம் வகிக்கும் அதிகாரிகள் மற்றொரு புறமும், மதிக்கத்தக்க அறிஞர்கள், பெரியோர்கள் வேறொரு புறமுமாக மண்டபம் அழகாகக் காட்சியளித்தது. கணக்கிடமுடியாத கூட்டம் உள்ளும் புறமும் இருந்தும் அமைதி அங்கே அரசோச்சியது. மன்னரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் அனைவரும்.

போட்டி தொடங்கியது. அமைச்சரின் தனித்தனி அறிமுகத்திற்குப் பின்னர், கவிஞர்கள் ஒவ்வொருவராகத் தமது காவியத்தை அரங்கேற்றினர்.

அவையினரைத் தனி உலகுக்கு அழைத்துச் சென்றுவிட்ட அந்தக் கவிஞர்களின் சொற்கோவைகள், மண்டபம் முழுமையும் வியாபித்து நின்றன. அதுவரை அரங்கேற்றப்பட்டவைகளில் எது சிறந்தது என்று

ஒரு வேண்டுகோள்

சில பதிப்பகங்கள் என் அனுமதியும், ஒப்புதலும் பெறமல், நான் எழுதியுள்ள கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றினைப் புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறர்கள்.

இது குறித்து சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுபோல்வெளியிடப்பட்டுள்ள புத்தகங்கள், பெரிதும் நான் எழுதாததையும், எழுதியதைத் திருத்தியும் தாறுமாறன முறையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆகவே, என் அனுமதி பெருமல் வெளியிடப்படும் கருத்துகளுக்கு நான் பொறுப்பு அல்ல என்பதைப் பொது மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட போலிகளைப் பொதுமக்கள் ஆதரிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சில தினங்களுக்கு முன்பு, மதுரை செல்வம் பதிப்பகம், **பரிசு— அள்பளிப்பு — வாழ்வு —வாழ்த்து** என்ற பெயரில் நான் எழுதியதாகப் புத்தகங்கள் வெளிவருவதாக விளம்பரப்படுத்தி இருக்கிறர்கள்.

மேற்படி பதிப்பகத்தாரிடம்நான் எந்தப் புத்தகம் வெளியிடும்படியும் அனுமதி அளித்ததில்லை. பொதுமக்கள் போலிகளை ஆதரிக்காமலிருக்க வேண்டுகிறேன்.

சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அன்பன்,
அண்ணுதுரை

தீர்மானிக்கமுடியாமல் எல்லோருமே திகைத்துப் போனார்கள். அனைத்துமே அவ்வளவு அழகாக, அற்புதமாக அமைந்திருந்தன.

கடைசியாக சோமநாதன் எழுந்தான். தனது காவியத்தை அவன் சொல்லத் தொடங்கிய தோரணையே எல்லோரையும் கவர்ந்துவிட்டது.

'கவிஞனின் காதல்'

–காவியத்தின் தலைப்பு இதுதான்! காவியத்தின் கருவும் ஒரு கவிஞனைச் சுற்றியே நின்றது.

அதில் அவன் தேடிச் சேர்த்திருந்த உவமைகளும், கையாண்டிருந்த சொல்லாடல்களும் அற்புதமான முறையில் இருந்தன. மொழியின் லாகவம், துள்ளல், உயிர்ப்பு அந்தக் காவியம் முழுதும் அருவியாக, இனிமையாக ஓடின; கேட்பவர்களின் காதுகளில் ரீங்காரமிட்டன. அவன் பாடிக்கொண்டேயிருந்தார்கள். யாருமற்ற ஆரணியத்தில் தனிக் குரலில் இசைக்கும் குயில் போல–பெருங்கடலில் ஆறு சங்கமமாகும்போது உருவாகும் இனிய ஓசைபோல அவனுடைய குரல் நெடு நேரம் ஒலித்துக்கொண்டிருந்தது. திறந்த வாய் மூடாமல், விழித்த கண்கள் இமைக்காமல், மடக்கிய கால்கள் நீட்டாமல் எல்லோரும் தம்மை மறந்து வீற்றிருந்தனர்.

பாடி முடித்ததும் அவன் மன்னர் கிருஷ்ணதேவராயரை 'என்ன உன் தீர்ப்பு?' என்று கேட்பதுபோலிருந்தது அது.

இராயர் எழுந்தார். அவரால் பேச முடியவில்லை. காவியத்தின் இனிமையிலேயே இன்னும் சஞ்சரித்துக்கொண்டிருந்த அவர் நிகழ் காலத்துக்கு வர அதிக நேரமாயிற்று. இனிய, அற்புதமான கனவு கண்டு விழித்தவர்போல அவர் பேசத் தொடங்கினார்.

'வந்தது முதல் நான் என்னையே மறந்து போனேன். இங்கே தலை சிறந்த கவிஞர்கள் பலர் தங்களது அற்புதமான திறமையால் நம்மை எங்கோ கொண்டு போய்விட்டார்கள். மொழி வளர்ச்சிக்குப் பெரும் அளவில் காரணமாக இருக்கின்ற அவர்களெல்லாம் நம்மால் பாராட்டத் தக்கவர்கள்; போற்றிப் புகழத்தக்கவர்கள். அவர்கள் எல்லோருமே பரிசு பெறத் தகுதியுடையவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அவர்களுள் கடைசியாகத் தமது காவியத்தை அரங்கேற்றிய அந்த இளைஞன்–சோமநாதன் நம் எல்லோரையும் கவர்ந்துவிட்டான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். அந்தக் காவியத்தில் நாம் மொழிச் சிறப்பை மட்டுமா கண்டோம்? உணர்ச்சிகளின் குவியல் அந்தக் காவியம். அதன் ஒவ்வொரு வார்த்தையும், வரியும் நமக்குத் தனித்தனிக் கதை சொல்லின. உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாய்ந்த இதய எதிரொலி அது. சோமநாதனே இந்தப் போட்டியில் வெற்றி பெறுகிறான்!'

இராயரின் கருத்து மறுக்கமுடியாதது என்பதை கூடியிருந்தவர்களின் மலர்ந்த முகங்கள் தெரிவித்தன. அவர்கள் எழுப்பிய கரகோஷங்கள் வெளிப்படுத்தின; கையொலிகள் எடுத்துக் காட்டின.

சோமநாதன் திரும்பினான். மன்னனையும், மக்களையும் மாறி மாறிப் பார்த்தான். கரங்கூப்பி வணங்கினான். வெற்றிப் புன்னகை அவனிடமிருந்து வெளி வந்தது.

'சோமநாதா! நீ விரும்பியதைக் கேள். வாக்களித்தபடி தரத் தவற மாட்டான் கிருஷ்ணதேவராயன்!'

இராயரின் அந்த வார்த்தைகளை அவன் ஆணையாகவே மதித்தான். எதற்காக அந்தப் போட்டியில் கலந்துகொண்டானோ அதையே கேட்டுவிடத் துடித்தான். ஆனால் அதை மன்னர் தரவேண்டுமே என்ற கவலையும் அவனிடம் தலைகாட்டத் தவறவில்லை.

'தயங்காதே சோமநாதா! விரும்பியதைக் கேள்!'

இது அவனை மேலும் தூண்டியது. நினைத்ததைக் கேட்டுவிடுவதில் தவறில்லை என்று முடிவு செய்துகொண்டு தொடங்கினான்:

'அரசே! நான்...'

அதற்குள் கிருஷ்ணதேவராயர் குறுக்கிட்டார்:

'கொஞ்சம் நில், சோமநாதா! நீ கேட்பதற்குமுன் நானே உனக்கு ஒரு பரிசு தருகிறேன். அதைப் பெற்றுக்கொண்டபின் உனக்குத் தேவையான மற்றவற்றைக் கேள்... இன்னொன்று: இப்பொழுதுதான் நீ கேட்பதை நான் தரமுடியும். பிறகானால் நான் தருவதைத்தான் நீ வாங்கிக்கொள்ள வேண்டி வரும்... இதோ, அந்தப் பரிசு உன்எதிரில்

இருக்கிறது. இதைப் பெற்றுக்கொண்டு விட்டதாக எண்ணிக்கொண்டு, அடுத்த தேவையைக் கேள்...'

பேச்சை நிறுத்திவிட்டு மன்னர் இடதுபுறத்தில் கை நீட்டினார். அங்கே—

சோமநாதன் ஆச்சரியத்தால் வாய் பிளந்து நின்றான். முக்காட்டை விலக்கியபடி அவனுக்கு எதிரில் வந்து நின்ற அவள்—

அந்தக் கண்கள்....உதடுகள்.... கன்னங்கள்...

'மன்னர் எவ்வளவு நல்லவர்! நான் என்ன பரிசை விரும்புவேன் என்று தெரிந்து, அதையே - அவளையே அளித்துவிட்டாரே அவர்!...'

—இப்படி நினைத்துக்கொண்டதும், அவன் தன்னையறியாமலேயே மன்னரை நோக்கிக் கரங்கூப்பினான்.

'இதுபோதும் அரசே! இந்த ஒரு பரிசுக்காகத்தான் நான் போட்டியிலேயே கலந்துகொண்டேன். நான் விடை பெறட்டுமா?...'

'இல்லை சோமநாதா! இந்த ஒரு பரிசு மட்டுமே உனக்கு போதுமானதாகத் தெரியலாம்; ஆனால் நான் இதோடு மட்டுமே விட்டுவிடத் தயாராக இல்லை. நகரின் எல்லையில் உங்கள் இருவருக்கும் ஒரு தனி மாளிகை ஏற்பாடுசெய்திருக்கிறேன். மானியங்கள் வேறு ஒதுக்கியிருக்கிறேன். போதுமல்லவா?...'

இதைச் சொல்லிவிட்டு, பொன் முடிப்பு ஒன்றும் அளித்தார் இராயர்.

சோமநாதனால் எதுவும் பேச முடியவில்லை. நன்றியறிதலோடு திரும்பவும் அவன் கைகூப்பினான்.

'உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்று எனக்குத் தெரியவில்லை. அதற்கென்று நான் ஒரு தனிக் காவியம் எழுதும் முயற்சியில் ஈடுபட வேண்டும்...நான் விடை பெறலாமா?...'

'இன்று அரண்மனையில் தங்கிப் போகலாமே இருவரும். இனி எப்போதுமா தங்கப்போகிறீர்கள்!...'

'இல்லை மன்னவா! என்னை மன்னியுங்கள்!...,

அவன் நடந்தான். அவள் அவனுக்குப் பின்னால் நடந்தாள். பல்லக்கும், படை வீரர்களும் அவர்கள் பின்னால் நடந்தார்கள்.

★

அவர்களுக்கென அளிக்கப்பட்டிருந்த அந்த மாளிகை சோமநாதனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது திறமைமிக்க கலைஞர்களால் உருவாக்கப்பட்டிருந்த அதன் ஒவ்வொரு பகுதியும் அவனது வெற்றிச் சின்னங்களாகத் தோற்றமளித்தன. தாய் அன்போடு அளித்த தின்பண்டத்தை பார்க்கும் ஆசையோடு அவன் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

நிலவு வந்தது. இன்றைக்குச் சரியாக ஒரு மாதத்திற்கு முன்னால் வந்து போன அன்று இரவு-அரண்மனைப் பூங்காவில் அவளை முதன் முதலில் கண்டது அவன் நினைவில் வந்து நின்றது. இதைச் சொல்லி அவளை மகிழ வைக்க வேண்டும் என்ற ஆசை வந்த, சோமநாதன் அவள் இருக்கும் அறையை நோக்கி விரைந்தான்.

வடித்தெடுத்த சிற்பம் உயிர் பெற்று வந்ததைப்போன்ற தோற்றமுடைய அவள், மஞ்சத்தில் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளை எழுப்ப மனமின்றி, அந்த அழகை நெடு நேரம் நின்று ரசித்துக்கொண்டிருந்தான் சோமநாதன். பிறகு அவள் அருகில் அமர்ந்து, அவளது கைகளை வருடினான். அவள் விழித்தாள். தாமரை மொட்டவிழ்வதுபோல அது அவனுக்குத் தோன்றியது. அந்த விழிகளின் அசைவில் புதிய சொர்க்கம் படைக்கப்படுவதாக அவன் எண்ணினான்.

'உனக்கு அந்த இரவு நினைவிருக்கிறதா?–அதுதான் நாம் முதன் முதலாகச் சந்தித்தோமே பூங்காவில்; அந்த இரவு...'

அவள் பேசவில்லை. பேசாதது மட்டுமல்ல; அவன் சொன்னதைப் புரிந்துகொள்ளாததைப்போல விழித்தாள் அவள்.

ஏன் அவள் பதில் பேசவில்லை?

காரணம் தெரியாமல் திணறினான் அவன்.

'உன்னோடு பேச எவ்வளவு ஆசையோடு ஓடோடி வந்திருக்கிறேன் நான்; ஏன் என்னிடம் பேசமாட்டேன் என்கிறாய்? பேசு!...... பேசிக்கொண்டே இரு! அதைக் கேட்பதற்காகவே நான் இங்கே வந்திருக்கிறேன். எங்கே, பேசு!'

இப்போதும் அவள் பேசவில்லை. ஆனால் முன்புபோலச் சும்மாவும் இருக்கவில்லை. விசித்து விசித்து அழத் தொடங்கினாள் அவள்.

'ஏன் அபரஞ்சி, எதற்காக அழுகிறாய்? நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா?...'

அவள் விரைவாக உள்ளே சென்றாள். மூடி வைத்திருந்த பெட்டி ஒன்றிலிருந்து எதையோ எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

திகைப்போடு அவளது செய்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த சோமநாதன், அதைக் கையில் வாங்கிப் படிக்கத் தொடங்கினான்:

"அன்புள்ள சோமநாதா!

முதன் முதலாக-வாழ்க்கையிலேயே முதல் தடவையாக கிருஷ்ணதேவராயன் உன்னிடத்தில் மன்னிப்புக் கேட்கிறான். அரண்மனையில்–ஆயிரக்கணக்கானோருக்கு மத்தியில்-வேண்டாம், வேண்டாம் எனும்படிப் பரிசு வழங்கிய மன்னனா இப்படி எழுதுகிறான் என்று திகைப்பாய். உண்மையில் அப்படி நடந்துவிட்டதற்காக நான் மன்னிப்புக் கேட்கத்தான் வேண்டியிருக்கிறது.

அபரஞ்சி ஆடலழகி. அவளை நீ காதலிக்கிறாய். அரண்மனைப் பூங்காவில் அடிக்கடி அவளும் நீயும் சந்தித்துப் பேசினீர்கள். அவளும் உன்னை நிச்சயமாக நேசிக்கிறாள். நீங்கள் சந்திக்கும்போதெல்லாம்உங்களை அறியாமல் தொடர்ந்து இந்த உண்மையை நான் அறிந்தேன்.

ஆனால்...அதே அபரஞ்சியைக் காணாமல், அவளுடைய ஆடலைக் காணாமல், அவளுடைய கீதத்தைக் கேட்காமல் என்னால் ஒரு நாள்கூட இருக்கமுடியாது. அந்த உண்மை உனக்குத் தெரியாதென்றால், இப்பொழுது நான் அதைத் திறந்தே சொல்கிறேன்: அபரஞ்சியை நான் காதலிக்கிறேன். அவளைப் பிரிந்து என்னால் ஒரு நாள்கூட இருக்க முடியாது!

இப்போது அவள் எனது பாதுகாப்பில் இருக்கிறாள்.

அப்படியானால், இப்போது உன்னுடன் இருப்பது அபரஞ்சியில்லாமல் வேறுயார் எனக் கேட்பாய். இவள் அபரஞ்சியல்ல; அவளது சகோதரி அஞ்சலி. அவளும் இவளும் இரட்டைக் குழந்தைகள். அதனால்தான் நீ, அவள்தான இவள் என்று ஏமாந்துவிட்டாய். நான்தான் அந்த ஏற்பாட்டைச் செய்தவன் – உன்னை ஏமாற்றுவதற்காகவே.

இவள் அவளைவிட எந்த விதத்திலும் குறைந்தவளல்ல – ஆடலிலும் கூடத்தான். ஆனால் ஒரே ஒரு குறை; இவள் ஊமை; வாய் பேச முடியாது. அதுவும் பிறவியிலேயே அல்ல, இடையில் ஏற்பட்ட அதிர்ச்சி ஒன்றின் காரணமாக.

அபரஞ்சிக்குப் பதில் அஞ்சலியை உனக்கு அளித்ததன் மூலம், உனது காதலை நிறைவேற்ற முடியவில்லையே என்றுதான் நான் கவலைப்படுகிறேன்.

என்னை மன்னித்துக்கொள்.

அன்புள்ள,

கிருஷ்ணதேவராயன்

சோமநாதனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. யாரை, எப்படி நொந்துகொள்வது?

அவன் வெளியே, இருளினூடே–எங்கு எனும் இலட்சியமற்று – விரைவாக நடந்தான். ★

மகனைக் கடிகிற மாதா - அங்கே ! மண்டியிட்டே பழகிவிட்ட மந்திரிகள் - இங்கே !

"மதியற்றவனே ! மடையனே !"

"ஏடா ! மூடா ! உன்னுல் எத்துணை ஏழையர்க்குத் தொல்லை ?"

"கண்கள் சிவக்க, கமலமுகம் கெட, சாராயம் குடிக்கிருயே ! உன் உடல் கெட்டழியும்; ஊருக்கு உன்னுல் ஒரு பயனும் இருக்காது !"

"நோய்க்கு வேண்டுமானுல் சிறிதளவு மருந்துடன் கலந்து குடி. மாருக, அளவுமீறிச் சாராயம் குடிக்கலாமா ?"

"நாலுபேரிடம் உள்ள நல்ல பழக்கத்தை எடுத்துக்கொள்; நாட்டுக்கும் நல்லது. பிறரிடம் கற்கவேண்டும் என்பதற்காக, தியசெயல்களையா பெற்றுக் கொள்வது ?"

வழியில் போகிறவனை, மற்ருெரு வழிப்போக்கன் திட்டவில்லை, இப்படி ! பெற்று வளர்த் தாய், தான் ஆளாக்கிய மகனைத் தான் இப்படிக் கண்டிக்கிருன்; நலமிழந்துவிட்டாயே எனக் கண்ணீர் வடிக்கிருள்.

ஆமாம் ! காகா கலேல்கர்தான் கண்டிக்கிருர், தான் பேணும் இந்தியை ! அவர் வார்தாக் கல்வித்திட்டத்தினை வளர்க்கும் காந்தீயத் தந்தையார்; தேசிய மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டு உழைப்பவர்; அகில பாரதக் கண்ணேட்டக்காரர். அவர் கண்டிக்கிருர் இந்தியை:

"மிதமிஞ்சிய வடமொழிக் கலப்பால் பாமரருக்குப் புரியாத மொழியாகிவிட்டது, இந்தி ! வடமொழிச் சொற்களை இந்தியில் கலக்கையில் இதை மனதில் வைத்துக்கொள்க !"

"இனியது – எளியது இந்தி மொழி ! எல்லோரும் அறிவது இந்திமொழி ! எண்ணிக்கையில் மிகுந்தோர் கற்றிருப்பது இந்தி மொழி !" என்றெல்லாம் புகழ் மாலை சூடிக் கட்டியங் கூறும் தென்னகத்து "வீரர்"களே ! கேளீர் !

"சாராயம் குடித்துக் கெட்டு விட்டானே மகன் !" என்று அன்னை அழுவதைப்போல, "வடமொழிக் கலப்பால் கெட்டு விட்டதே இந்தி !" என்கிருர் கலேல்கர்.

"மகன் வாழவேண்டும்; அவன் மணக்கும் மங்கை, மஞ்சளும் பூவுமாய் நெடுநாள் மகிழவேண்டும் ! ஊராரெல்லாம் ஒரே குரலில் உன் மகனைப்போல் உண்டா !" எனப் பாராட்டக் கேட்டு மகிழவேண்டும் !" என ஆசையால் உந்தப்படும் அன்னை போன்றவர்தான், காகா கலேல்கர்.

"இந்தி வானுற வளர்ந்தோங்கிச் செழிக்க வேண்டும். வண்ண நலம் பல கெழுமி மணக்க வேண்டும். நாடெல்லாம், நல்லறிஞர் நூலெல்லாம் இந்தியே ஒளிரவேண்டும் ! கல்லாத பாமரனும் களிக்கவேண்டும் இந்தி மொழியை எளிதில் கற்று !" என்று விரும்புபவர்தான் கலேல்கர். அந்த எண்ணத்திற்காகத் தன் வாழ்வையே படைத்தவர் தான், அப்பெரியார் ! ஆனுல்... விழிகள் ஆணவக்கொழுப் படைக்கப்பெற்ற குருடனுகிவிட்டது இந்தி, என்றும் கூறுகிருர் !

இந்தியில் அகராதி !

இந்தியில் கலைக்களஞ்சியம் !

இந்தியில் புதிய சொற்கள் கண்டுபிடிப்பு !

இந்தியில் புதிய கலை நூற்கள் !

ஆயிரம் ஆயிரம் திட்டங்கள் இப்படி வகுத்து, கோடி கோடிப் பணத்தை வாரி இறைப்போரே ! கோலோச்ச வந்த காங்கிரசாரே ! குருவாக நீங்கள் மதிக்கும் கலேல்கர் கூறுவதைக் கேட்டீரோ ?

பிணத்திற்கு மலர்க்குவியலைப் படைக்கும் பேதையர்- சாக்கடைக்குப் பன்னீர் தெளிக்கும் ஏமாளிகள்–மரத்திற்குச் சந்தனம் பூசும் மதியிலிகள் என்றெல்லாம் சூடான மொழிகளில் அவர் திட்டாவிட்டாலும், இடித்துக் காட்டித்தான் இருக்கிருர் நயமான வழியில். அதுவும், மத்தியப் பிரதேச இந்தி இலக்கிய மாநாட்டைத் திறந்து வைக்கையில் பேசினுர், அப்படி !

கலேல்கர் பிறமொழிச் சொற்கலப்பால் இந்தி கடினமான மொழியாகிவிட்டது என்கிருர். இந்தியின் புதிய வரி வடிவம் வேறு புதிய தொல்லையை வளர்த்துவிட்டதென்கிருர், மற்ருெரு பம்பாய் வாசி !

பம்பாய்ப் பள்ளிகளில், உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பு வரை உள்ள பாட நூல்களில, இந்தி எழுத்துகள் புகிய வரி வடிவத்தில்-சீர்திருத்தப் பெற்ற வடிவத்தில்–அச்சிடப் பெற்று வழங்குகின்றனவாய்; இப்போது. தொடக்கப் பள்ளியின் முதலாம் வகுப்பு முதல் உயர்நிலைப்பள்ளியின் இறுதி வகுப்பு வரை இந்தி கட்டாயப் பாடம், என்றுலும் புதிய வரி வடிவம் புகுந்ததால் எண்ணற்ற மாணவர் தொல்லையுறுகின்றனர். திடீரென, புது முறையைப் புகுத்தியதால் மாணவர் பாடம் கடினமாகிவிட்டது. யாருக்கு? இந்தியோடு இயைந்த மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட வடநில மாணவர்க்கு ! என்ருல் ...சற்றும் இந்தியை அறியாத நம் மாணவர் நிலை என்ன ?

"கரண்ட்" ஏட்டிற்குக் கடிதம் எழுதிய அந்த பம்பாய் வாசி மேலும் எழுதுகிருர், பலப்பல, திடீரெனப் புதிய முறையை எல்லா வகுப்புக்களுக்கும் கொணர்ந்து துன்பத்தை உண்டாக்குவதைவிட, அதனை இந்த ஆண்டு, முதல் வகுப்பில் மட்டும் அமுலாக்கி, படிப்படியாக மேலே கொண்டுவந்திருந்தால் தொல்லை இல்லை என்கிருர்.

அத்தோடு மற்ருெரு தொல்லையும் எழுகிறது. பழைய வரி வடித்தில் தேர்ந்து பயிற்சி பெற்று—H. S. S. எனும் பட்டம் பெற்று இப்போது இந்தி போதிப்போர், இனித்தொடர்ந்து பதவியில் இருக்க முடியாதாம் ! 1960 வரைதான் வேலை பார்க்க முடியுமாம் ! தொடர்ந்து வேலை பார்க்க விழைந்தால், புதிய முறைப்படித் தேர்வு எழுதித் தேர்ந்து புதிய பட்டம் பெற்றுத் தான் வரவேண்டுமாம் ! அய்யகோ ! இதுதான் கல்லாமை போக்கும் ஆசிரியர் பதவி நில்லாமை எனப்படுவதோ ? ஆசிரியரையே பந்து விளையாடும் "ஆசிய சோதி"யின் அருளாண்மையும் அறிவாண்மையும் இருந்தவாறுதான் என்னே ?

எம்மாநிலத்திலும் புதிய கல்வி முறைகள் அறிமுகப்படுத்தப் பட்டபோது, பழைய ஆசிரியர் எவரும் வேலையிழந்தாக நாம் அறியவில்லை ! ஆனுல் இந்தி நடவடிக்கைகளில் மட்டும் என்னையோ, புதிய புதிய கொடுமைகள்; புரியாத நடைமுறைகள்; இதற்காக வீணுகிறது ஏழையர் வியர்வையான வரிப் பணம் !

"பிறமொழிச் சொற்கள் கலப்பால் புரியவில்லை, இந்தி !" என்கிருர், கலேல்கர் !

"புதிய வரி வடிவத்தால் மாணவர்க்கும் தொல்லை; பழைய ஆசிரியர்க்கும் வேலை இல்லை !" என ஒப்பாரி வைக்கிருர் பம்பாய் வாசி பில்லிமோரியா !

வாழும் வடக்கிற்கே இந்தி தொல்லை தருகிறது என்ருல், வாடும் தெற்கிற்குமட்டும் இந்தத் தொல்லை இல்லையா ? ஆனுலும், அமைச்சர் பெருமக்கள் ஆலவட்டம் சுற்றுகின்றனர்; ஆனந்தப் பள்ளுப் பாடுகின்றனர்; இந்திக்கு-ஆராய்ந்து எதையும் பார்க்காமல் ! அதனுல்தான் சொல்கிறேம்: கேட்கிறேம்; மகனைக் கடிகிற மாதா-அங்கே ! மண்டியிட்டே பழகிவிட்ட மந்திரிகள்- இங்கே ! மானமிகு தமிழர் படை எங்கே? எங்கே?

"முத்துவேலன்."

வெண்பாப் போட்டி

30. நின்ற நிலையே நிலை.

காவிக்குள் காமிகளாய் காட்சிதரும் புல்லரெலாம்
ஆவி நலமுறவே ஆர்வுற்ருர்—காவியஞ்செய்
மன்னன் மகனும் இளங்கோ துறவென்ற
நின்ற நிலையே நிலை.

—க. பொ. இளம்வழுதி, கலிதீர்த்தாள்குப்பம்.

துட்டர் துகிலுரியத் துரோபதையாள் நின்றநிலை
கற்புச் சிதைந்தநிலை காண்பாயே—கொற்றவையில்
மன்னவன்முன் கண்ணகியாள் வாதுரைத்துக் காரிடிபோல்
நின்ற நிலையே நிலை.

—குகன்குருசாமி, கமுதி.

ஆன்ருேர் மொழிப்புலவர் ஆய்கலைஞர் போர்வீரர்
சான்ருேர் கொடைவள்ளல் சால்கவிஞர்—போன்ருேர்,பால்
உண்ட முலையே முலை;மற்று தோலாகி
நின்ற நிலையே நிலை.

—பே. சா. தனராசு, நாமக்கல்.

முப்பால் மறுபதிப்பாய் முத்த திரு.வி.க.
தெப்பம் துணைக்கொள்க தென்னவரே!—துப்புக்கோன்
தென்றல் தமிழ்பரப்பிப் பொன்ருப் புகழேற
நின்ற நிலையே நிலை.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

கானல் வரிவினையால் கண்ணுளன் நீங்கிடவே
மானம் தனையோம்பி மாசின்றி—வானுயர்ந்த
குன்ருப் புகழ்துறவு கொண்டிட்ட மாதவிதான்
நின்ற நிலையே நிலை.

—க. குணசேகரன், சென்னை-1.

புத்தர் குறள்சோதி பூங்குன்றன் மாமூலர்
வைத்தபல கொள்கையெலாம் வையத்தில்—தத்துவமாய்
பொன்போன்ற நற்கருத்தாய்ப் போற்றுகின்ற வாய்மொழியாய்
நின்ற நிலையே நிலை.

—செகதவல்லி, திருவெண்ணெய்நல்லூர்.

வள்ளுவனைக் காப்பியனை வண்மை இளங்கோவை
தெள்ளரிய கீரனைச் சீத்தலையை—கள்தமிழே!
என்ருேநீ பெற்றுவிட்டாய்; எம்மொழிக்கும் நீதலையாய்
நின்ற நிலையே நிலை.

—நா. மாணிக்கம், பென்னுகரம்.

வானேடும் வெண்ணிலவும் வாசமிகு மென்மலரும்
தேனேடும் காவிரியும் திங்கரும்பும்—நான்பாடும்
இன்பக் கவியமுதும் என்றுமுள தென்தமிழும்
நின்ற நிலையே நிலை.

—முகுமன், கோவை.

குற்றம் புரிந்தவன் கொற்றவனே யானுலும்
செற்றம் வருமென்றே அஞ்சாது—தெற்றெனவே
முன்நின்று கண்டித்த மூதறிஞர் கோவூரார்
நின்ற நிலையே நிலை.

—கலி. பொன்-பாலு, வண்ணுரப்பாளையம்.

அன்றிலென வாழ்ந்திடுவாள்; அன்பை வழங்கிடுவாள்;
தன்றுணையே தெய்வமெனப் போற்றிடுவாள்.—தென்றலே!
நின்றபுகழ் காத்திடுவாள்; செந்தமிழ்ப்பெண் கற்புவழி
நின்ற நிலையே நிலை.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை.

வருங்காலம் போங்காலம் வாழ்காலம் மூன்றும்
ஒருமுகமாய் ஏந்தி உவக்க—முரணின்றி
மன்பதைக் குள்முப்பால் மையத்தில் வள்ளுவனர்
நின்ற நிலையே நிலை.

—த. மருதமுத்து, பூமுடையான்பட்டி.

பள்ளியறைக் குள்ளிருந்தேன்; பாவையவள் வந்திட்டாள்;
துள்ளி எழுந்தோடித் தொட்டிழுத்தேன்;—கள்ளியவள்
நின்றிட்டாள் தள்ளியே; நீள்கொடியே போலன்னுள்
நின்ற நிலையே நிலை.

—வெ. சதிர்வேந்தன், சுந்தராபுரம்.

ஆரியம் வந்தந்த ஆங்கிலம் வந்திந்திக்
காரியும் வந்துங் கலங்காமல்—பாரினில்
என்றும் நிலையர்க என்தமிழ்த் தாய்,அடடா!
நின்ற நிலையே நிலை.

—அரிசில்கிழான், அகரப்பேட்டை.

ஆடும் எழிற்குணத்து ஆள்மயக்கி வேசியரைத்
தேடும் இழிகுணத்தோர் தேவையெலாம்—கேடுதரும்
இன்பத்திற் கேயல்லால் ஏதுமிலை; ஆங்கவர்கள்
நின்ற நிலையே நிலை.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

மூவேந்தர் தாலாட்ட முதறிஞர் பாலூட்ட
பாவேந்தர் பேர்சூட்ட பார்மீது—ஓவாது
வென்றி தனைநாட்டி வண்டமிழாள் பேரொளியாய்
நின்ற நிலையே நிலை.

—மகிழேந்தி, கரந்தை.

தில்லை நடராசன் சிற்சபையில் நின்றநிலை
கொள்ளை அழகென்பர் கூன்விழியர்—இல்லையில்லை
என்நெஞ்சை ஈர்த்திட்ட கன்னி கதவிடுக்கில்
நின்ற நிலையே நிலை.

—பா. பாலகிருஷ்ணன், பாண்டமங்கலம்.

குட்டைத் தெளிநீரில் நீந்திக் குளித்ததன்பின்
தட்டிவிட்டுத் தொட்டிழுத்தாள் என்மனையாள்,—கட்டிலண்டை
மென்று முழுங்காமல் மெய்மறந்தேன்! கண்நான்கும்
நின்ற நிலையே நிலை.

—செ. செயராசு, தோப்படப்பட்டிவரதராசபுரம்.

அழகுச் செல்வம்!
அறிவுச் சுரங்கம்!
கவிதைக் காடு!
கற்பனைக் குவியல்!
'ஊர்-பேர்' வெண்பா!
ஓவிய வண்ணம்!
ஏராளமான பக்கங்கள்
விலை ரூ. 2-00

நிர்வாகி: பொங்கல் மலர்
தென்றல் :: சென்னை.6

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு